# பாதுகாவலன்

PATHUKAVALAN

## சந்தா

பாதுகாவலன் பத்திரிகையை தபால் மூலம் பெற்றுக் கொள்ள ஒரு ஆண்டுக்கான சந்தா ரூபா 75/- மட்டுமே. ஐரோப்பிய நாடுகளுக்குஒரு ஆண்டுசந்தா £15, அமெரிக்கா, கனடாவுக்குஒருஆண்டு சந்தா 30 U. S. $. பாதுகாவலன் அஞ்சல்பெட்டி2 யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நீங்கள் பணத்தை அனுப்பினால் வாரம்தவறாது பத்திரிகை உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

மலர் 114 இதழ் 23 26-8-1988 (ஆகஸ்டு-26-செப்டம்பர்-2) பிரதி ரூபா 1-00 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு


யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் ஜேம்ஸ் கொல்லப்பட்டதை ஆட்சேபித்து மகஜர் கையளிப்பு:

# கல்லூரி ஆசிரியர் கொலையைக் கண்டித்து

# யாழ். செயலகம்வரை ஆட்சேப ஊர்வலம்

**இம்மாதம் 18ஆம் திகதி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரித்த சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் திரு. யேம்ஸ் அருமைநாதனின் இறுதிச் சடங்கு இம்மாதம் 22ஆம் திகதி கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டபின் ஆட்சேப ஊர்வலம் யாழ். செயலகத்தை நோக்கிச் சென்று மகஜர் கையளிக்கப்பட்டது.**



இம்மாதம் 18 ஆம் திகதி காலையாழ். ஆஸ்பத்திரிவீதியில் தமது இல்லத்தின் முன்பாக துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இறந்த யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் திரு. ஜேம்ஸ் அருமைநாதன் (வயது 49) கொலைசெய்யப்பட்டதை ஆட்சேபித்து யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், அன்னையர் முன்னணி-பெற்றோர் அமைப்பு, பிரஜைகள் குழு உறுப்பினர்கள் இம்மாதம் 22-ம் திகதி காலை ஊர்வலத்தை நடத்தினர். சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆசிரியரின் இறுதிச் சடங்கில் பங்கு கொள்ள ஆயிரக்கணக்கான அனுதாபிகள், மாணவர்கள், உறவினர்கள், நண்பர்கள், குழுமியிருந்தது குறிப்பிடத்தக்கது. இறுதியாத்திரை ஊர்வலத்தில் பாடசாலை பான்ட் வாத்தியக்குழு சோக இசை முழங்க மாணவர்கள் பவனியாகப் பின்சென்றனர். இறுதிக்கிரிகையின் போது இரங்கலுரைகள் பல்வேறு பிரமுகர்களால் வழங்கப்பட்டன.

பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டபின் ஆட்சேப ஊர்வலம் பிரதான வீதி, கோவில்வீதி, ஆஸ்பத்திரிவீதி வழியாக யாழ். செயலகத்தை அடைந்தது. ஆசிரியர் கொல்லப்பட்டதை ஆட்சேபித்து அரச அதிபருக்கு வழங்கப்பட்ட மகஜர் குழுமிநின்ற திரளான மக்கள் மத்தியில் பகிரங்கமாக வாசிக்கப்பட்டது.

## புனித ஆனாள் ஆண்டு விழா

வங்காலையம்பதியில் பள்ளி கொண்டு அம்மக்களை பரமன் அருளால் பாதுகாத்து வழி நடத்தும் அன்னம்மாள் அன்னையரின் திருவிழா 26-07-1988 செவ்வாய் தினம் அன்று அப்பங்கு மக்களால் வெகுகோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

17-07-1988 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய நவநாட்களைத் தொடர்ந்து 25-07-1988 அன்று மாலை

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## புனித ஞானப்பிரகாசியார் விழா

கடந்த 7-8-88 அன்று உயிலங்குளப்பங்கின் டீமசனட் பீடப் பணியாளர்களும், துணைப் பங்கான பறப்பாங்கண்டல் டீமசனட் பீடப்பணியாளர்களும் இணைந்து தமது பாதுகாவலராம் புனித ஞானப் பிரகாசியாரின் திருவிழாவை திவ்விய பலிப்பூசையுடனும், விளையாட்டுப் போட்டிகளுடனும், கலை நிகழ்ச்சிகளுடனும் சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

அறையதினம் காலை திருப்பலி முடிவடைந்தவுடன் தம்மை முழுவதும் புனித ஞானப்பிரகாசியாருக்கு அர்ப்பணம் செய்தார்கள். அதனைத் தொடர்ந்து உதைபந்தாட்டப் போட்டியில் மூன்று குழுக்களாகப் பிரிந்து பங்கு பற்றிய தோடு ஏனைய விளையாட்டுகளிலும் பங்கு பற்றினார்கள்.

மதிய இடைவேளையின் பின் கலை நிகழ்ச்சிகள் கிராமரீதியில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து உயிலங்குளம் பீடப்பணியாளர் சபையின் தலைவர் வ?வேற்புரையாற்றியதையடுத்து பங்குத் தந்தை தமது உரையில் பீடப்பணியாளர்கள் வெறுமனே பீடத்தில் மட்டுமன்று சமூகத்திலும் சேவை புரிய வேண்டுமென்றும் எல்லோருக்கும் முன்மாதிரிகையாக இருக்க வேண்டுமென்றும் தலைமை உரையில் குறிப்பிட்டார்.

அடுத்து விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொண்டு வெற்றியீட்டியவர்களுக்கு பங்குத்தந்தையினால் பரிசில்கள் வழங்கப்பட்டது. ஈற்றில் பறப்பாங்கண்டல் டீமசனட் பீடப் பணியாளர் சபையின் தலைவர் செல்வன் ஏ. அன்ரன் யோகநாயகம் அவர்களின் நன்றியுரையோடு விழா மாலை 5.30 மணியளவில் இனிதே முடிவுற்றது.

தகவல்: ச. பிரபா

## புனித மரியன்னை பேராலயப் பெருவிழா

யாழ். புனித மரியன்னைப் பேராலயப்பெருவிழாவும் மரியாயின் ஆண்டு நிறைவு விழாவும் இவ்வருடம் மிகவும் பக்திச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

நவதின ஆரம்ப நாளாகிய ஆவணித் திங்கள் 6ம் நாள் சனிக்கிழமை பெருவிழாக் கோலம் பூண்டது. அன்று மாலை 4.00 மணியிலிருந்து ஆனி மாதம் 15-ம் நாள்குடும்பங்கள் தோறும் தம்மக்களைத் தரிசித்து குணமளித்தும், குறை தீர்த்தும் மீண்ட அன்னைக்கு நிறைவான நன்றி நவில, எண் திசையிலுமிருந்து 40 க்கும் மேற்பட்ட அழகான, பக்திப் பரவசமான ஊர்வலங்களுடன் நீல அணிபோன்று நீலக்கொடிகள் தாங்கிய வண்ணம் மக்கள் வெள்ளத்துடன் ஒன்றன் பின் ஒன்றாக அன்னை ஆலயத்தை வந்தடைந்த காட்சி, மக்கள் ஆனந்தக் கண்ணீர் விட்டு வரவேற்ற காட்சி என்றுமே வாழ்க்கையில் மறக்க முடியாது.

பேராலயப் பெருவிழாவினோடு, மரியாயின் ஆண்டு நிறைவு விழாவும் இணைந்து வந்தமையினால் அருளுரைகள் அனைத்தும் மரியாளை மையப் பொருளாக வைத்து ஆற்றப்பட்டது. வாழ்க்கைப்பயணத்தில் துணையாக அணைக்கும் கரங்கள். (யாத்திரை), உதரத்தில் மட்டுமல்ல உள்ளத்திலும் கருத்தாங்கியவள். (வார்த்தை), அவளது புதிய பார்வை, புதிய சமுதாயத்திற்கு வித்திட்டது. (அன்பு), நிறைவான குடும்பத்திற்கு தாய் மரியின் பங்களிப்பு (குடும்பம்), அவள் கண்ணீருக்கும் அர்த்தமுண்டு (துன்பம்), சீடத்துவத்திற்கு ஓர் வரைவிலக்கணம் (விசுவாசம்), இறைபதத்தில் அவள் ஒரு வாடா மலர் (பக்தி), என்றும் அவள் ''தீர்க்க சுமங்கலியே'' (ஒப்புரவு), கல்வாரி ஈன்றெடுத்த தவப்புதல்வர்கள் (நற்கருணை), விண்ணேற்பு அடைந்த மரியன்னை.

மேற்படி வழங்கப்பட்ட அருளுரையின் கருப்பொருளுக்கு கமைய, தினமும் ஒவ்வோர் பொருத்தமான சின்னம் காணிக்கைப் பவனியில் இடம் பெற்றுப் பலிப்பீடத்தில் வைக்கப்பட்டது.

ஆவணி 14ந் திகதி நற்கருணை விழாவாகக் கொண்டாடப்பட்டது. மறுநாள் பெருவிழாக் கூட்டுத்திருப்பலியினை எமது யாழ். ஆயர் நிறைவேற்றி வைத்து, மரியாயின் ஆண்டினையும் நிறைவு செய்துவைத்தார். அன்று மாலை 4.00 மணிக்கு மரியன்னையின் திருச் சுரூபப் பவனியுடனும், திருச் சுரூப ஆசீருடனும், மாலைத் திருப்பலியுடனும், விழா இனிதே நிறைவெய்தியது.

மோ. தார்சீசியஸ்.

## காவலூரில் மரியன்னை - விண்ணேற்ற விழா

மரியாயின் ஆண்டு நிறைவை முன்னிட்டு ஊர்காவற்றுறைப் பங்கிலே புனித மரியாள் ஆலயத்தில் அன்னைமரியின் விண்ணேற்றத்திருவிழா மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. நவநாட் தினங்களில் சிறுவர்தினம், இளைஞர் தினம், முதியோர் தினம் (குடும்பங்களின்) பெற்றோர் தினம், நோயாளர்தினம், நற்கருணைதினம் எனப்பலதிறப்பட்ட நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. அருட்திரு யேசுதாசன் அடிகளாரின் அருளுரைகளின் வழிகாட்டலும் திருநாளைச் சிறப்பிக்க உதவின. 15-8 88 திருநாட் கூட்டுத் திருப்பலியும், காவலூர்ப்பட்டின சபையின் எல்லைகள்வரை பரந்த அளவில், மரியாள் ஆலயச்சிம்மாசனத்தில் கிருபாசனம் கொண்டு அருள்பாலிக்கும் மோட்ச அலங்காரியின் பெரிய திருப்பவனியும் இடம் பெற்றன. இருபது ஆண்டுகளின் பின் இப்பெரிய திருப்பவனி பக்திப் பரவசமாய் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

தகவல்:- எஸ். எம். ஜே.

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

## எம்கருத்து

### நூறுண்டு சாதனை

சுதேச குருக்களை உருவாக்கும் முயற்சி ஆரம்பித்து 100 ஆண்டு நிறைவுறுவதை நினைவு கூரும் முகமாக, மத்திய மலைநாட்டில், கண்டிமாநகரில் புனித இராயப்பர் சபையின் ஆசியப் பிராந்தியக் கூட்டமும், நூற்றுண்டுவிழா அங்குரார்ப்பணமும் இவ்வாரம் சிறப்பாக நடைபெற்றன.

தென் கிழக்காசிய பிரதிநிதிகள், குருக்கள், கருதினல்மார் இந்நிகழ்ச்சிகளுக்குத் தலைமைதாங்கிச் சிறப்பித்தனர்.

சுதேச குருக்களை உருவாக்கும் பணியின் நூற்றுண்டுவிழா நடைபெறும் இவ்வாண்டில் எமது மறை வட்டத்திலுள்ள புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் முதற்கனிகள் ஐவர் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படுவது சிறப்பான அம்சமாகும். இக்குருமடத்திலிருந்து சென்ற மாதம் யாழ். மறை வட்டத்திற்கென இரு குருக்கள் திருநிலைப்படுத்தப் பட்டனர். எதிர்வரும் 6ஆம் திகதி மன்னர் மறை வட்டத்திற்கென அருட்சகோதரர்கள் கென்னடி, ஞானதிக்கம், அவிதப்பர் ஆகிய மூவரும் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர்

நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட சுதேச குருக்களை ஊக்குவிக்கும் முயற்சி முன்னேற்றப் பாதையில் வீறுநடைபோடுகின்றது என்பதற்கு இதைவிடச் சான்றுகள் வேண்டுமா?

முன்னைய காலங்களில் ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஏராளமான குருக்களும், துறவியரும் எமது மண்ணில் விசுவாசவித்தை விதைத்து அது வளர அரும்பணியாற்றினர்.

சுதேச குருக்களை ஊக்குவித்ததன் பயனை நல்லூர்ச் சுவாமி ஞானப்பிரகாசர் போன்றோர், எமது மண்ணின் மைந்தர்களாக, பல கலையும் கற்றுப் பாண்டித்தியம் பெற்றதோடு நின்றுவிடாது, இக்காலத்தில் அவரது பணியால் விசுவாசவித்தைப் பெற்றோர் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படுமளவுக்கு, விளைநிலங்களைப் பண்படுத்திச் சென்றுள்ளனர்,

நமது வீடுகளிலும் கிராமங்களிலுமிருந்து இளைஞர்கள், யுவதிகள் குருக்களாகவும், துறவிகளாகவும் இறைவனுல் அழைக்கப்பட வேண்டும் என்பதற்காக நாம் செய்துவரும் முயற்சிகளுக்குப் புத்தூக்கம் தரும் வருடமாக இந்த ஆண்டு அமையவேண்டும்,

எனவே இறைவனின் திராட்சைத் தோட்டத்திற்குத் தேவையான பணியாட்களை அனுப்பவும், தெரிந்துகொள்ளப்பட்ட பணியாட்கள் மேலும் புனிதத்துவமடையவும், அதில் நிலைத்து நிற்கவும் இறைமக்கள் தமது செப, தப, தானதரும முயற்சிகளில் ஈடுபடவேண்டியது அவசியமாகின்றது.

சுதேச குருக்கள் தம் பெயருக்கொப்ப முற்றிலும் சுதேச மயமாக்கப்பட்டவர்களாக மாறும்போதுதான் அவர்களது பணி சிறக்கும், முன்னைய காலத்தில் ஐரோப்பா முதலிய வேறு நாடுகளிலிருந்து வந்து பணியாற்றிய குருக்களையும், அவர்களோடு மக்களுக்கிருந்த தொடர்பு முறைகளையும் இப்போது சுதேசக் குருக்களும், அவர்களுடைய சொந்த இரத்தங்களான மக்களும் முன்மாதிரிகையாகக் கொள்ளுதல் முற்றிலும் பொருந்தாது,

குருக்களுடையபணி மக்களுடையவாழ்வு, தாழ்வு எல்லாத் துறைகளிலும் இழையோடிச் செல்கிறது. குருக்கள் - மக்கள் உறவானது அரசியல், கல்வி, கலாசார, பொருளாதார, சமூகசீரமைப்பு முதலாம் எல்லாத் துறைகளிலும் ஊடுருவிச் செல்லுதல் வேண்டும்.

காலத்தின் இயல்புகளை உற்றுணர்ந்து இறையரசை வளர்ப்பதற்குரிய முறையில் குருக்களும், மக்களும் ஒன்றிணைந்து செயற்பட இறைமக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

**பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்**
**பற்றி விடாஅ தவர்க்கு.**

# ஜீன் பிகாட்டும் ஆசா.ஜோசப் வாஸ் முனிவரும்

பாப்பரசரின் மறைபரப்பு சபையாகிய அப்போஸ்தலராகிய புனித இராயப்பர் சபையின் ஸ்தாபகியாகிய ஜீன் பிகாட்டின் வாழ்க்கையை ஒருபுறம் நோக்கும்போது, எமது நாட்டின் மாபெரும் அப்போஸ்தலரான ஜோசவ் வாஸ் முனிவருக்கும் அவளுக்குமிடையில் குறிப்பிடத்தக்க ஒரு தொடர்பு காணப்படுகிறது. 1656 - 1792 ஆண்டுகளில் இலங்கையின் கரையோரப்பிரதேசங்களைக் கைப்பற்றியிருந்த டச்சு கிழக்கிந்தியக் கம்பனி கத்தோலிக்க சமயத்தைத் தடைசெய்திருந்த நெருக்கடியான காலகட்டத்தில் பணி செய்தவர் யோசவ்வாஸ் முனிவர்.

வீரம்மிக்க பிரெஞ்சு யுவதியின் வாழ்க்கை வரலாற்றை எதேச்சையாக வாசித்த பொழுது கிளர்ச்சியூட்டும் இந்தத் தொடர்பு முதன்முதலாக விளக்கம் பெற்றது. மன்சிஞ்ஞோர் சலேஸ்கி 1897 ல் அச்சேற்றிய ஜோசவ்வாஸ் முனிவரின் வாழ்க்கை வரலாற்றை வாசித்தமையே (சுதேச குருக்களின் ஆக்கம் பற்றிய) அவளது கருத்துக்களை உறுதிப்படுத்தவும், உற்சாகத்தைத் தூண்டவும், பெரிதும் காரணமாயிருந்தது என அந்நூலின் நான்காம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. கருதினுல் அக்னியார்டி தாமே அதை வாசிக்கும்படி அவளுக்கு சிபாரிசு செய்திருந்தார். சுதேச குரு - அப்போஸ்தலருக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இவர் விளங்கியமை, இந்தியாவில் சுதேச குருக்களை ஏற்படுத்துவதற்கு திருச்சபை மேற்கொள்ளும் முழுமுயற்சியையும் நெம்பிவிடக் கூடிய ஒரு ஆதார தளமாக இருக்கக்கூடும் எனவும் அவர் சுட்டிக்காட்டினுர்.

தேவதூதன் போன்ற இந்த கோவைக் குருவானவருடைய வீரம் ஜீன் பிகாட்டை எவ்வளவுக்குக் கவர்ந்ததென்றுல், அவள் தானே அப்புத்தகத்தைப் பிரெஞ்சில் மொழிபெயர்க்க முன்வந்தாள். இத்தாலிய மொழியில் அவளுக்குப் போதிய அறிவு இல்லாத போதிலும், அவள் தனது பணியைச் செய்துமுடித்து அதே ஆண்டில் (1897) கேன் நகரில் அதைப் பிரெஞ்சு மொழியில் அச்சேற்றுவித்தாள்.

துரதிர்ஷ்டவசமாக, அது அங்குள்ளவர்களை, குருக்களைக் கூட அதிகமாகக் கவரவில்லை. ஐரோப்பாவில் மறைபரப்புக்கான அழைத்தல் என்பது தமதுசொந்த நாடுகளிலுள்ள ஆண்களும் பெண்களும் உலக நற்செய்திப்பணியை தாமே ஏற்றுக்கொள்வதுதான் என்ற அசையாத எண்ணம் கொண்டவர்கள் மத்தியில் அவளது கருத்து செயலின்மையையும், தடைகளையும் எதிர்ப்புகளையும் கூட எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

ஜீன் ஏமாற்றமடைந்தாலும் மனம் சோர்ந்து விடவில்லை. (ஆயர்களுக்கு எதிராகத் தன்னும்) அவள் தன் நிலையில் உறுதியாக நிற்க அவளுக்குத் துணைபுரிந்தது ஜோசவ் வாஸ் முனிவர் மீது அவள் கொண்டிருந்த பக்தியே

அது உண்மையான ஒரு பக்தியாக இருந்தது. கடந்தகால வீரன் ஒருவனைப்பார்த்து அடைந்த ஒரு கிளர்ச்சி அல்ல. இறப்பின் பின்னரும் எமக்கு அண்மையில் இருக்கும் ஒரு இறை அடியானின் துணையை வேண்டுதலாக இருந்தது. (புனிதர் பட்டம் அளிக்கப்படு முன்னரே உள்ள புனிதர்களின் ஐக்கியப் பிரயோசனம் இது) 1899 இல் நோக்காடுகள் மிக்க நோயிலிருந்து அவளது தாய் குணமடைந்தது இந்தப்பரலோக நண்பரின் உதவியினுல் தான் என அவள் கூறியதில் ஆச்சரியமில்லை இல்லாவிட்டால் இந்நோய் அவளது தாயைப் படுக்கையில் கிடத்தி, வேலை நடைபெறுவதற்கு முட்டுக்கட்டையாக இருந்திருக்கும்

வாழ்க்கைக் குறிப்புகளிலிருந்து, ஜீன் இதை ஹக்கோடேற் ஆயர் மன்சிஞ்ஞோர் பேர்லியோஸிடம் கூறியதாகத் தெரிகிறது. எமக்கு மகிழ்ச்சி தரக்கூடியதொன்று என்னவென்றுல், இந்தக் கதை முழுவதையும் கூறி கண்டி ஆயர் பக்ஞனி அவர்களுக்கு ஜீன் எழுதிய கடிதம் கண்டியிலுள்ள சுவடிச்சாலையில் உள்ளதென அறிகின்றேம்.

இவையெல்லாவற்றையும் பற்றி நாம் இப்போது சிந்தித்தல் வேண்டும்.

ஜீனின் தாய் குணமானது ஒருவருக்கு புனிதர் பட்டமோ (முத்திப்பேறு பெற்ற பட்டமோ) அளிப்பதற்குக் காட்டக்கூடிய ஒரு புதுமை என்று கொள்ளலாமா? ஒருவருக்கு இத்தகைய பட்டங்களை அளிப்பதற்கு, கிடைத்த சகாயங்களைப் பற்றிய செய்திகள் (Fama) ஒரு முக்கிய அம்சமாகக் கருதப்படுகின்றது. ஆனுல் வேர்ஜில், சிசரோ ஆகியோரால் கையாளப்பட்டுக் கிறிஸ்தவ மரபில் ஏற்றுக்கொள்ளப்பட்ட (சுவிசேஷ காலந்தொட்டு) இவ்வார்த்தைக்கு "பரவிய ஒரு செய்தி" அதாவது மக்களின் பொதுவானஒரு நம்பிக்கைஎன பொருள் கொள்ளலாம். இறை அடியார் ஒருவரிடம் வேண்டியதால் (ஆன்மீக அல்லது இலௌகிக சிறிய அல்லது பெரிய) சகாயங்களைப் பெற்றுக் கொள்வதையே இது பொதுவாகக் குறிக்கிறது. பல நூற்றுண்டுகளின் பின், இத்தகைய சகாயம் இயற்கை விதிகளுக்கு அப்பாற்றப்பட்டது என விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படவேண்டிய ஒன்ருக இது மாறிவிட்டது. தெய்வாதீனமாக இறைவன் தலையிட்டு ஆற்றும் ஒரு செயலைத் தெரிந்துகொள்வது. வைத்தியர் முதலியோருடைய தொழிற்றுறை அபிப்பிராயங்களில் இன்று தங்கியுள்ளது. இன்று இத்தகைய தொழில் வல்லுநர் (கத்தோலிக்கராயிருப்பினும்) இயற்கை விதிகளுக்கு, விஞ்ஞான விதிகளுக்கு அப்பாற்பட்டதென ஒரு கருத்தைக் கூற விரும்புவதில்லை, நாம் முன்னே போக முடியாமல் தடைப்பட்டு நிற்கின்றேம். இது நாமே தேடிக் கொண்டதுதான். மேலும் இந்தக் காரியத்தில், இறந்த ஒருவர் இறைவனிடம் பரிந்து பேசும் சக்தியுள்ளவராக இருக்கிருர் என்பதை நிரூபிப்பதற்கும் சிறியதும் பெரியதுமான அநேக சகாயங்களைப்பற்றிய பொதுவான செய்தியைப் போல் விஞ்ஞான ரீதியாக, நிரூபிக்கப்பட்ட ஒரு புதுமை அவ்வளவு துணைபுரிவதாகத் தோன்றவில்லை. (ஒரு விதத்தில் சிறியனவே சிறந்தன என்றும் கூறலாம். ஏனெனில் அது மனித வாழ்வின் சிறு சிறு காரியங்களையும் உள்ளடக்குகின்றது.

மீண்டும் நாம் யோசித்தால் மக்களின் மன்ருட்டு அவர்களின் விசுவாசம் ஆகியவற்றுக்கே அழுத்தம் கொடுக்கப்படுகிறது. இதற்கு அவர்கள் சுதந்திரமாக இயல்பாக செபிக்கக்கூடியதாயிருக்க வேண்டும். சகல புனிதர்களின் விழா எமக்கு நினைவூட்டுவதுபோல் கத்தோலிக்கராகிய எமக்கு புனிதர்களின் ஐக்கியப் பிரயோசனம் என்பது பட்டம் பெற்ற புனிதர்களை மட்டுமல்லாது அனைவரையும் உள்ளடக்கியிருக்கவேண்டும். "பொதுவான" அதிகாரபூர்வமான வழிபாட்டுக்குப் புறம்பாக எமது சொந்த நண்பரிடமும், புனிதர்பட்டம் பெருதவர்களுள் எமக்குப் பிடித்தமானவர்களிடமும் நாம் மன்ருடுவதற்குத் தடையில்லை. இந்தத் தனிப்பட்ட செபம் புனிதர் பட்டத்துக்குத் தேவையான சகாயங்களைப் பெறுவதற்கு அவசியமானது. ஆகவே இந்த சமுதீதப் பிரயோசனம் (வணக்கமும் வேண்டுதலும்) புனிதர் பட்டத்துக்கு முன்வருவது மட்டுமல்ல அதற்கு வழிசெய்வதும்கூட.

"பொதுவான வணக்கத்தை"த் தவிர்ப்பதற்கு அளவு மீறிய கவனம் செலுத்தியதனுல் தனிப்பட்ட செபத்தை அமுங்கச் செய்துவிட்டோமா? என்று சிந்தித்துப் பார்ப்போம். ஒரு விடயத்தை எடுத்துக் கொண்டால், ஒன்றுகூடும் உரிமை இருக்கின்ற காரணத்தால் (திருச்சட்டம் 298 அனைவருக்கும் அனுமதித்துள்ளது) தனிப்பட்ட செபம் குழுக்களிலும் இருக்கலாம். உதாரணமாக பிதா பியோ செபக் குழுக்கள் நன்கறியப்பட்டவையே.

ஜீன் பிகாட் ஜோசவ் வாஸ் முனிவரைக் குறிப்பிட்டுள்ளமை வேறொரு கேள்வியை

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

# 100 ஆண்டுகள்

# மறைபரப்பு நாடுகளுக்கான குருக்கள்

## திருச்சபையின் பணியில் பொதுநிலையினர்



பிரான்ஸ் நாட்டில் கேன் நகரில் வாழ்ந்த ஸ்டெப்னி பிகாட்டும், ஜீன் பிகாட்டும் சுதேச அழைத்தல்களுக்காக அப்போஸ்தலரான புனித இராயப்பர் சபையை நிறுவத் தீர்மானித்து நூறு ஆண்டுகளாகிவிட்டன.


அக்காலம் பிரான்ஸில் மறைபரப்பு ஆர்வம் மிகுந்த ஒன்ருக இருந்தது. ஆயிரக் கணக்கான பிரான்ஸிய ஆண்களும் பெண்களும் தமது அழகிய தாய் நாட்டைவிட்டு, தூர இடங்களுக்குச் சென்று மறைப்பணி புரிந்துகொண்டிருந்தனர். பிரெஞ்சுப் புரட்சியின் பின்னர் சில புதிய துறவற சபைகள் நிறுவப்பட்டிருந்தன. ''மறைபரப்பு நாடுகளுக்குச் செல்லுங்கள்'' என்பதுதான் அங்குள்ள உற்சாகம் மிகுந்த, ஆழமாகப் புதுப்பிக்கப்பட்ட திருச்சபையின் அறைகூவலாக இருந்தது. அன்று அப்பிரதேசங்களில் பணிபுரிவதற்குப் போதிய மறைபரப்பாளர் இருந்தமையால் சுதேசமயமாக்கல் ஒரு அவசிய தேவையாகக் கருதப்படவில்லை.

ஆயினும் மறைபரப்பு நாடுகளில் உண்மையான தொரு சுதேசத் திருச்சபையை ஏற்படுத்துவதற்காக உழைக்கும்படி ஜீனும் ஸ்டெப்னியும் பரிசுத்த ஆவியினுல் தூண்டப்பட்டனர். ஏதோ ஒரு காலத்தில் ஒவ்வொரு திருச்சபையும் தனது சுயதேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய பணியாளர்களைக் கொண்டிருக்க வேண்டுமென அவர்கள் உணர்ந்திருந்தனர் போலும். அங்கு மறைபரப்பாளர் பணிசெய்வது மட்டும் போதுமானதாயிருக்கவில்லை; தமக்குப்பின் பணிபுரியக்கூடிய ஆண்களையும் பெண்களையும் தயார்செய்வதும் இன்றியமையாத ஒன்ருக இருந்தது.

தடைகள் பல குறுக்கிட்ட போதிலும், தாம் செல்லுமிடங்களில் எல்லாம் சுதேசக் குருக்களை உருவாக்க வேண்டும் என்பதை மறைபரப்பாளரின் மனதில் பதியச் செய்வதற்காக ஜீன் அயராது உழைத்தாள். இலங்கைத் திருச்சபையில் விசுவாசத்தைக் காப்பாற்றிய ஜோசவ்வாஸ் முனிவரின் வீரத்துவ வாழ்வும், கருமையான நிறம் உடையவராய் இருந்தமையால் இலங்கைக்குள் அவர் இரகசியமாக வரக்கூடியதாய் இருந்தமையும், மறைபரப்பாளர் செல்ல முடியாத இடங்களிலும், காலங்களிலும், சுதேசக் குருக்கள் விசுவாசிகளின் தேவைகளை சிறப்பாகப் பூர்த்திசெய்ய முடியும் என்பதை ஜீனுக்கு நன்குணர்த்தின. ஜோசவ் வாஸ் முனிவர் அவள் மனதில் எத்தகைய உள்ளார்வத்தை ஏற்படுத்திஞரென்றுல், அவள் மன்சிஞ்ஞோர் சலெஸ்கியைக் கொண்டு முனிவரின் வாழ்க்கை வரலாற்றை இத்தாலிய மொழியில் எழுதுவித்ததுடன், தானே அதை பிரெஞ்சில் மொழி பெயர்த்து 1897இல் அச்சேற்றினுள்.

1899இல் தனது தாயின் நோய் குணமானது கூட ஜோசவ் வாஸ் முனிவரின் புதுமையால்தான் என்று கருதினுள்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்துக்கு நீண்ட காலத்துக்கு முன்னரே ஒரு சுதேசத் திருச்சபையின் பிறப்புக்காக உழைத்த ஜீனும், ஸ்டெப்னியும் அக்காலத்தின் இறைவாக்கினர்கள் ஆவர். மறைபரப்பு நாடுகளிலிருந்து மேலும் மேலும் பல இளம் ஆண்களும் பெண்களும் ஆண்டவரைப் பின்செல்ல வேண்டும் என அவர்கள் விரும்பியது மட்டுமல்ல, தமது செபத்தாலும் நிதியுதவியினுலும் அவர்களின் உருவாக்கத்துக்குத் துணை புரியவும் ஆவலாயிருந்தனர்.



ஜீன் பிக்காட்

இந்நோக்கத்திற்காகவே அவர்கள் சுதேச அழைத்தல்களுக்காக அப்போஸ்தலரான புனித இராயப்பர் சபையை ஏற்படுத்தினர். ஜப்பானிலுள்ள நாகசாக்கியின் ஆயரான மன்சிஞ்ஞோர்ஜுலஸ் அல்பொன்ஸ் குசின் என்னும் நண்பரிடமிருந்து கிடைத்த ஒரு கடிதமே அவர்களைச் செயலில் இறங்கத் தூண்டியது. அவர் எழுதியதாவது: ''எனது குருமடத்தைப்பற்றி உமக்குக் கூறவா? தற்போது அங்கு ஐம்பதுக்கு மேற்பட்ட மாணவர் உள்ளனர். எவ்வளவு சிக்கனத்தைக் கடைப்பிடித்தாலும், இந்த ஐம்பது பேரைப் பராமரிப்பது எமது அற்ப வருவாய்க்குப் பெரும் சுமையாக இருக்கிறது என்பது உமக்கு எளிதில் விளங்கும். கடந்த கல்வியாண்டின் ஆரம்பத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்து இவ்விரண்டு பேராக பன்னிரண்டு புதிய மாணவரையே சேர்த்துக்கொள்ள முடியும் என நாம் அறிவிக்க வேண்டியிருந்தது. ஆனுல் ஒரு சமூகத்திலிருந்தே பதினைந்து பேர் வந்திருந்தனர். இந்த இளைஞர்கள் சிறந்த மாணவர்களாகவும், பின்பு சிறந்த குருக்களாகவும் விளங்கியிருப்பார்கள். ஆனுல் நாம் ஆயிரம் காரணங்களைக் கூறி அவர்களைத் திரும்ப வீட்டுக்கு அனுப்ப வேண்டியிருந்தது.'' தமது நெருங்கிய நண்பர்களைக் கூட்டி அவர்களிடமிருந்து சேர்த்த சில காணிக்கைகளை அந்த நல்ல ஆயருக்கு அனுப்பி வைத்தனர்.

குருத்துவத்துக்காக இந்த இளைஞர்களை உருவாக்குவதில் இவ்விரு பெண்களும் கண்ட மனநிறைவு, மறைபரப்பு நாடுகளுக்கு இன்னும் அதிக அளவில் உதவி செய்யக்கூடிய தான அப்போஸ்தல சபையொன்றை நிறுவும்படி அவர்களைத் தூண்டியது.


பிகாட் குடும்பத்தினரிடமிருந்து முதன் முதல் நிதியுதவிபெற்ற பெரிய குருமடங்களிலொன்று கண்டியில் உள்ளதாகும். பாப்பு 13ஆம் சிங்கராயரின் தூண்டுதலுக்கமைய, கிழக்கிந்தியத் தீவுகளுக்கு பாப்பரசரின் தூதுவராயிருந்த மன்சிஞ்ஞோர் லடிஸ்லோஸ் சலெஸ்கியின் வழிநடத்துதலின் கீழ் இப்புதிய குருமடத்துக்குத் திட்டம் வகுக்கப்பட்டது இந்திய துணைக்கண்டத்துக்கு குருக்களை உருவாக்குவதே இதன் நோக்கம்.

1895ஆம் ஆண்டு, பாரிஸிலுள்ள வெளிநாட்டு மறைபரப்பு நிறுவனத்தின் உயர் அதிபருக்கு அம்மணி பிகாட் எழுதிய கடிதத்தில் இக்குருமடத்துக்கு முதன் முதலாக அளிக்கப்பட்ட 12,000 பிராங் நிதியுதவி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது அது கணிசமான ஒரு தொகையாகும். இப்பணம் ''கண்ணீர் நோக்காடுகள்'' மூலம் சேகரிக்கப்பட்டதாகும்.

எத்தனையோ தடவைகளில் அவர்கள் தவருகப் புரிந்து கொள்ளப்பட்டனர். பிரான்ஸிலுள்ள திருச்சபையிடமிருந்துங்கூட அநேக இடையூறுகள் ஏற்பட்டன. ஆனுல் திருத்தந்தையோ அவர்களது இந்த அற்புதமான ஆரம்ப முயற்சியின் பெறுமதியை உணர்ந்து அவர்களைத் தொடர்ந்து ஊக்குவித்து வந்தார். பெருமதிப்புக்குரிய திருத்தந்தை 13ஆம் சிங்கராயர்தான் இந்த முயற்சியை ஆசீர்வதித்து, பாப்பரசரின் சபையாக அதை அங்கீகரித்து, மனப்பூர்வமான ஆதரவை அளித்து வந்தார்.

ஆண்டாண்டு காலமாக இலட்சக் கணக்கான மக்களின் தியாகங்கள் மூலம், இச்சபை மேலும் மேலும் குருமடங்களை நிறுவி, ஒவ்வொரு திருச்சபையையும் சுதேசமயமாக்கும் செயற்பாட்டை விரைந்து செய்யக் கூடியதாயிருந்தது. மறைபரப்பு நாடுகளின் வரலாற்றின் பல்வேறு கட்டங்களில் உள்ள சுதேசக் குருக்களின் ஒப்பீட்டுப் புள்ளி விபரங்களை இங்கு தருகிறேம்.

| | ஆபிரிக்கா | ஆசியா |
|---|---|---|
| 1925 | 159 | 4263 |
| 1949 | 2532 | 6868 |
| 1969 | 5143 | 9811 |
| 1985 | 10163 | 13633 |



பல்வேறு உலக நாடுகளிலிருந்து உரோமைக்குச் சென்று குருத்துவப் பயிற்சி பெற்ற குருமாணவர்களுக்குத் திருத்தந்தை குருத்துவ திருநிலைப்படுத்தல் வழங்குதல்

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பின்னர் இறையியலில் சுதேசமயமாக்கல் என அழைக்கப்பட்ட ஒன்று, நீண்ட காலத்தின் முன்னரே ஜீன், ஸ்டெப்னி என்போரின் அப்போஸ்தல பணிமூலம் ஆயத்தம் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தது. இவர்கள் தமக்குக் கட்டளை கிடைக்கும் வரை காத்திராமல், பரிசுத்த ஆவியினுல் தூண்டப்பட்டு, திருச்சபையின் வரலாற்றிலே துணிவுள்ள பொது நிலையினராகப் பங்கெடுத்து, மறைபரப்பு நாடுகளிலுள்ள திருச்சபைகள் தன்னிறைவு பெறும்படியாக உழைத்தார்கள்.

இலங்கையிலுள்ள நாம் இச் சபைக்கும் இதனை நிறுவியவர்களுக்கும் விசேட விதத்தில் நன்றிபாராட்ட வேண்டும். ஏனெனில் குருக்கள், துறவியரைப் பொறுத்தவரை எமது திருச்சபை ஏறக்குறைய முழுமையாகச் சுதேசமயமாக்கப்பட்டுவிட்டது. இன்று இங்கு பணிபுரியும் வெளிநாட்டு மறைபரப்பாளர் மிகச் சிலரே. எமது ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரும் இந்நாட்டவரே. இவர்களுள் சிலர் தாமே மறைபரப்பாளராகி விட்டனர்.

ஆபிரிக்கா, அமெரிக்கா, ஆசியா, ஒசியானியா மறைபரப்பு நாடுகள் அனைத்திலுமே கடந்த நூற்றுண்டு நிறைந்த பயனுள்ளதாக இருந்துள்ளது, இறைவன் எமக்களித்த அற்புத கொடையாகிய இந்தச் சபைக்காகவும், அதனை நிறுவிய ஜீன், ஸ்டெப்னி ஆகியோருக்காகவும் இறைவனுக்கு நன்றி கூறிக் கொண்டாட வேண்டிய ஒரு வைபவம் இது.

ஆகஸ்ட் 21ஆம் திகதி ஞாயிறுக்கிழமை சுதேச அழைத்தல்களுக்கான அப்போஸ்தலரான புனித இராயப்பர் சபையின் நூற்றுண்டு நிறைவு ஆசியரீதியில் இலங்கையில் கொண்டாடப்படும். எமது அன்புக்குரிய, உண்மையான சுதேச மறைபரப்பாளராகிய ஜோசவ் வாஸ் முனிவரின் பிரசன்னத்தாலும் பணியாலும் பரிசுத்தப்படுத்தப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்டி நகரில் இது இடம் பெறும். அத்துடன் இது பிகாட் குடும்பத்தினரிடமிருந்து நேரே உதவி பெற்ற, இந்திய துணைக்கண்டத்திலுள்ள பாப்பரசரின் பிராந்திய குருமடங்களில் முதலாவதான குருமடம் அமைந்துள்ள இடமாகும்.

இந்த பாப்பரசரது சபையின் உலகத் தலைவரான பேரருள்திரு மன்சிஞ்ஞோர் ஜோசே சாஞ்சேஸ், அதன் பொதுச் செயலாளரான மன்சிஞ்ஞோர் பெர்னன்ட் பிராங்க் ஆகியோர் ஆடம்பரமான

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

சிறுகதை

# தீர்ப்பு

மாதமோ மார்கழி மாதம், நேரம் நடு நிசியைக் கடந்து விட்டது. காலநிலை கடுங்குளிராக இருந்தது. இன்னும் சொற்ப நேரத்துள் அடாத மழைவிடாது பெய்யப்போகும் நிலை. மயான இருள் எங்கும் அடர்ந்திருந்தது "சுவாமி, சுவாமி, ஐயோ சுவாமி" என்ற அழைப்புடன் யாரோ ஒருவர் கதவில் தட்டும் சத்தம் கேட்டு, ஏதோ பயங்கரக்கனவு கண்டுபீதி கொண்டவர் போல திடீரெனப் படுக்கையை விட்டு எழுந்தார் தோமஸ் சுவாமியார். அடுத்த ஞாயிற்றுக்கிழமை பூசைமுடிய நடைபெறவிருந்த கத்தோலிக்க சேவா சங்க இயக்கத்தின் மாதாந்த கூட்டத்தில் முக்கிய ஆலோசனைகளை வழங்குவதற்காகச் சிந்தனையில் ஆழ்ந்திருந்த சுவாமியார் அன்று வியாழக்கிழமை இரவு படுக்கைக்குச் செல்வதற்கு நடு நிசியாகி விட்டது. படுக்கையை விட்டெழுந்தவர் தனது 'ரோச்சை' அடித்து நேரத்தைப் பார்த்தார். அறையிலிருந்த சுவர்க்கடிகாரமும் அவர் துரிதமாகச் செயற்பட வேண்டுமென்றதைச் சுட்டிக்காட்டுவது போல அந்த நடுச்சாமத்தின் மயான அமைதியில் இரண்டுமணியைச் சுட்டிக் காட்டியதுடன் 'டாங், டாங்' என இருமுறை அலாரமடித்துச் சத்தமெழுப்பியது. திரும்பவும் "சுவாமி, சுவாமி" என்ற சத்தத்தைக்கேட்ட தோமஸ் சுவாமியார் தனது வழமையான 'கசொக்' கை அணிந்து கொண்டு கதவைத் திறந்து, "யாரது?, என்ன இந்தநேரம்?" எனக்கேட்டார். "சுவாமி நான் புதுக்குடியிருப்புப் பங்கைச்சேர்ந்தவன். எனது பெயர் ஜெயருஜன, யாரோ ஒருவர் என்னுடன் கூடமுல்லைத்தீவிலிருந்து பஸ்ஸில் வந்தவர், பெயர் தெரியவில்லை, மிகவும் ஆபத்தான கட்டத்தில் இருக்கிறார். இன்னும் கொஞ்ச நேரத்தில் செத்துப்போவார் என்று நினைக்கிறன். வாய்பேச மாட்டாத அவரது சைகைகளைப் பார்த்தால் அவர் ஒருகிறீஸ்தவன் போலத் தெரியுது. பஸ்சாரதி நித்திரைத்தூக்கத்தில் இருந்ததால் பஸ்கரடிப் போக்குச் சந்தியிலையுள்ள பாலை மரம் ஒன்றுடன் மோதி 'ஸ்ரியறிங்' கையும் கிழித்துக் கொண்டு போயிருக்குது சாரதியும் இன்னும் மூன்றுபேரும் செத்துப்போனார்கள். நாலைந்து பேருக்குக்கடும் காயம். இந்த மனிதனும் இன்னும் கொஞ்ச நேரத்தில் செத்துப் போவார் என்று தான் நினைக்கிறன்," ஜெயருஜன் இந்த விபரங்களை அவசரம் அவசரமாகச் சொல்லிக் கொண்டிருக்கையில் சுவாமியாரும் அவஸ்தைப் பெட்டி, திருவிருந்துச்சிமிழ், ஆசிநீர் என்பவற்றுடன் ஆயத்தமாகி விட்டார். குளிர் காற்று மிகக் கடுமையாக வீசிக் கொண்டிருந்தது. அக்கடுங்காற்றின் அலைகளையும் கிழித்துக் கொண்டு தோமஸ் சுவாமியார் வந்தவருடன் கூடி விபத்து நடந்த கரடிப்போக்குச் சந்திப் பாலைமரத்தடியை நோக்கி மிக விரைவாக நடந்து கொண்டிருந்தார். அவருடைய வேகமான நடையிலும் அதிவேகமாக அவரது மனம்முதல்நாள் காலைஅவருக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவத்தை இரை மீட்டுக்கொண்டுசென்றது. அந்தப் பயங்கர நிகழ்வு தோமஸ் சுவாமிகளை மிகவும் எச்சரித்துக் கொண்டிருந்தது.

அன்றுகாலை, நாளாந்த பலிப்பூசையை முடித்துக் காலை உணவருந்தச் சாப்பாட்டறைக்குச்சென்ற சுவாமியார் தபாற்காரர் சண்முகத்தின் சைக்கிள் மணிச்சத்தம் கேட்டு விருந்தைக்கு வந்து அவர் நீட்டிய கடிதங்களைப் பெற்றுக்கொண்டார். அவருக்கு வரும் கடிதங்கள் அநேகமாக மறைவட்ட வேதாகம சங்கம், கத்தோலிக்க சேவா இயக்கம், ஆலய அர்ப்பணிப்புக்கான நிதிகள், சமய சம்பந்தமான செய்தி இதழ்கள் ஆயரின் பணிப்புரைகள் என்பனவற்றை அடக்கியனவாக இருக்கும். அன்றைய தினம் அவற்றுள் ஒன்று மிக வித்தியாசமானதாக இருந்ததால் அதைத்திறந்து வாசித்தார். அவர் தலைசுற்றியது. மூளை விறு விறுத்தது. தோமஸ் சுவாமிகளின் சேவைக்காலத்தில் இத்துணை பயங்கரமான ஓர் தீர்ப்பு வழங்கப்பட்டது இது தான் முதற்றடவை. பயத்தினால் திகைப்புண்டு, கண்களில் நீர்வடிய அக்கடிதத்துடன் சுவாமியார் நற்கருணை முன்பாக முழந்தாட்படியிட்டு சிலுவை வடிவில் கைகளை உயர்த்திச் செபித்துக் கொண்டிருந்தார். அச்செபம் சாதாரண செபமல்ல. அடுத்த நாள் சவால் விடப்பட்டிருக்கும் அவரது உயிருக்குப் பாதுகாப்பு வேண்டிச் செய்யப்பட்ட செபம், உண்மையில் அச்செபம் கிறீஸ்து பெருமானின் ஒலிவேத் மலை வேண்டுதலை நினைவூட்டியது சுவாமிகளுக்கு. "சுமை சுமந்து சோர்ந்திருப்போரே எல்லோரும் என்னிடம் வாருங்கள்! நான் உங்களைத் தேற்றுவேன்" என்ற நற்செய்திப் பகுதி சுவாமியாருக்கு இக்கடுந்துயர வேளையில் பெருமளவு ஆறுதல் அளித்தது. 'கையோடு கம்மாரிஸ்' அவ்வேளை ஒரு முக்கியவிடயமாகத் தோமஸ் சுவாமிகளைச் சந்திக்க வந்தார் அப்பங்கைச் சேர்ந்த வித்தியாலய அதிபர் அந்தோனிமுத்து. அதிபர் அந்தோனிமுத்து என்ற உருவில் தேற்றரவாளனாகிய தூய ஆவியின் தேற்றரவு கிடைத்திருப்பதாகவே சுவாமியார் நினைத்திருப்பார். கையில் கடிதத்துடன் கண்களில் நீர் மல்க நற்கருணைப் பேழைக்கு முன்பாக முழங்காற்படியிட்டிருந்த சுவாமிகளின் அசாதாரண நிலை கண்டு மலைத்து விட்டார் அந்தோனிமுத்து, சுவாமியாரின் இந்த விபரீத நிலைகண்டு மலைத்துவிட்டார் அந்தோனி முத்து, சுவாமியாரின் இந்த விபரீத நிலைகண்டு பொறுத்திருக்க இயலவில்லை அவருக்கு. உடனடியாக அவரை நெருங்கி "ஏன் அழுகிறீர்கள் என்ன நடந்தது? சுவாமி, சொல்லுங்கள்" என்று கேட்டார். பதில் ஏதும் கூறாமலேயே கடிதத்தை அதிபரின் கையில் வைத்தார்சுவாமியார். அதைப் பெற்றுக்கொண்டவர் மௌனமாக அதிலுள்ளதைப் படித்தார்.

சுவாமி தோமஸ் அறிவது,

'எல்லாம் தெய்வச்செயல் என்று சொல்லுவார்கள்; அது மெய்மையோ, பொய்மையோ நான் அறியேன். ஆயினும் நாளை விடிவதற்குள் உனக்கு நடக்கவிருப்பதை நான் நன்கு அறிவேன். அது தெய்வச் செயல் அல்ல எனது செயல். எனது மாற்றமுடியாத தீர்ப்பு. நீ எங்கிருப்பினும் கொலை செய்யப்படுவாய். நீ எனக்கும் என் குடும்ப கௌரவத்துக்கும் சவாலாக நடந்துகொண்டதற்கு உனக்கு நான் வழங்கும் தீர்ப்பு நாளைய தினத்தை நீ காணவே மாட்டாய். இது உறுதி இது சத்தியம்.

இப்படிக்கு,
உனக்குத் தீர்ப்பு வழங்கும்
நீதிபதி
ப. வேதநாயகம்

இக்கடிதத்தின் தாக்கத்தினை, அதனை வரைந்தவரின் கடும் போக்கினை நன்கு புரிந்து கொண்டார் அந்தோனிமுத்து. அவர் ஒரு திருப்பணியாளர் அல்லாவிடினும் சாதாரண பொது நிலையினர் என்ற அளவில் ஆழமான விசுவாசப் போக்குடையவர். அத்துடன் குருவானவரை ஆறுதற்படுத்தக்கூடிய சொல்வளமும் பரந்த ஞானமும் அவருக்கிருந்தது. தெய்வச் செயலானது சிலுவையடியில் நின்ற செந்தூரியனைப் பிரமிக்கச் செய்தமை, கிறீஸ்துநாதரின் கல்லறையில் நின்ற காவலரை அஞ்சி நடுங்கச் செய்தமை,

M. E. ஜோர்ஜ்
மிருசுவில்.

தமாஸ்கு நகருக்குப் போகும் வழியில் புனித சின்னப்பரைக் கீழே விழுத்தாட்டியமை, அப்போஸ்தலர்க்கரசரான இராயப்பரின் பிரசங்கத்தைக்கேட்க வந்துகூடிய பக்கட் கூட்டத்தைக் கவர்ந்து வசப்படுத்தியமை, முதலாம் தெய்வீகச் செயல்களைச் சுவாமியாருக்கு நினைவூட்டி வலுவூட்டினார் அதிபர் அந்தோனிமுத்து.

முதல் நாளைய நிகழ்வுச் சிந்தனையிலிருந்து விடுபட்டு சுயநினைவுக்கு மீண்ட சுவாமியார், ஜெயராஜனுடன்கூடக் கரடிப்போக்குச் சந்திப் பாலைமரத்தடிக்கு வந்து சேர்ந்துவிட்டார். அவ்வழியால் வந்த வாகனங்கள், அதில் வந்தவர்கள் அந்தப் பயங்கரக் காட்சியைப் பார்ப்பதற்கு முண்டியடித்துக் கொண்டிருந்தனர். நொருங்கிய பஸ்ஸில் பயணஞ்செய்த சிறுவர்களும் பெண்களும் பயப்பிராந்தியுடன் காணப்பட்டனர். பயங்கரமான அந்தக்கண்ணருவியின் மத்தியில் தனது கடமையைக் கனகாத்திரமாய் மதித்து நெரிசல்களை ஊடறுத்துச் சாகக்கிடந்த அந்தப் பிரயாணியிடம் சென்றார். அந்த அவஸ்தைப்படும் மனிதனைக் கண்டதுதான் தாமதம் தோமஸ் சுவாமியார் கண்களில் நீர் மல்கத் தலைகுனிந்து சற்றுநேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். "கோணாத நீதிபரன் பாவிகளைத் தண்டிக்க தமது கரங்களை உயர்த்தும்பொழுது யாரே எதிர்நிற்கவல்லார்" என்று தமிழ்மணம் கமழ தனது பாட்டனார் பாவிலுப்பிள்ளை உபாத்தியார் அடிக்கடி சொல்வதன் அர்த்தத்தை நிதர்சனமாகப் புரிந்துகொண்டவர்போல நெடியதொரு பெருமூச்சுவிட்டார் தோமஸ் சுவாமிகள். அந்த மனிதன் வேறு யாருமல்ல. அதே தினம் வெள்ளிக்கிழமை தோமஸ் சுவாமியாருக்கு மரணதண்டனை நிறைவேற்றும் ஒரே ஒரு நோக்குடன் முதல்நாள் வியாழன் முல்லைத்தீவிலிருந்து அந்த நொருங்கிய பஸ்ஸில் வந்த பாவி வேதநாயகம் அவனே தான். தனது மரண அவஸ்தையின் மத்தியிலும் சுவாமியாரை அடையாளம் கண்டுவிட்டான். மரணக்கண்ணீருடன் கடந்த நாட்களின் சம்பவங்களின், —அதுவும் முதல் நாள் தான் மேற்கொண்டு புறப்பட்ட நடவடிக்கையின் நினைவுக்கண்ணீரும் சங்கமமாகி அவனது இரு விழிகளில் இருந்தும் வடிந்துகொண்டிருந்தது. சுவாமியாருடன் ஏதாவது கதைக்கலாம்போல இருந்தது அவனுக்கு. ஆயினும் அவனால் அவனது உதடுகளைத் தானும் அசைக்க இயலவில்லை. அவனது சிந்தனை கடந்த கால நிகழ்வுகளைமீட்டுக்கொண்டது.

ஒரு நாள் ஞாயிறுப்பூசையின்போது தோமஸ் சுவாமியார் ஆற்றிய உரை வேதநாயகத்தின் வாழ்க்கையில் அவன் விட்ட தவறுகளை தெளிவுபடுத்தியது. அந்த உரையைச் சாட்டாக வைத்து அவனது தீய நண்பர்கள் அவனைக் குருவானவருக்கு எதிராகத் தூண்டிவிட்டனர். அவனது விவிலிய அறிவெல்லாம் விழலுக்கிறைத்த நீராகிவிட்டது. தோமஸ் சுவாமியாரை எப்படியாயினும் கொலை செய்தேயாகவேண்டுமென்ற இறுதி முடிவுக்கு வந்துவிட்டான். ஆனால் இறுதியில் அவனது திட்டத்தை நிறைவுசெய்யமுடியாதளவுக்கு தெய்வச் செயல் அவனின் திட்டத்தில் குறுக்கிட்டுவிட்டது. ஆனாலும் அவன் ஒரு பாவிதான். அவனுக்கு இப்பொழுது வேண்டியது பாவமன்னிப்பொழிய வேறேதுமில்லை. அதையே தன் சைகைகளின்மூலம் தன் உடன் பிரயாணி ருஜனுக்கு வெளிப்படுத்தியிருந்தான். நாளும் பொழுதும் பாவ சங்கீர்த்தன ஆசனத்தில் இருந்து எத்தனையோ ஆன்மாக்களின் பாவங்களுக்கு பாவமன்னிப்பளித்துப் பயிற்றப்பட்டவர் அல்லவா? தோமஸ் சுவாமிகள் அவனுக்கு பாவமன்னிப்பும், அவஸ்தைப் பூசுதலும், திருவிருந்தும் அளிக்கப்பட்டுவிட்டன. மரணத்திலும் நித்திய ஜீவியத்தைக் கண்டுவிட்டான். அந்தப் பாவி வேதநாயகம். கண்களை மூடி நித்திய நித்திரையில் ஆழ்ந்துவிட்டான். ஓர் அதிஉத்தம நற்கிரிகையை நிறைவேற்றியதில் மனநிறைவு கண்டார் தோமஸ் சுவாமியார்.

(யாவும் கற்பனையல்ல)

---

தேனருவி:

ஆண்டின் 22ஆம் ஞாயிறு (28—08—88)

## முக்குலத்தாரில், எக்குலத்தவர்?

ஒவ்வொருவரதும் மனநிலைகளும், நோக்கங்களுமே அவரவர் நடத்தையை நிர்ணயிக்கின்றன. மூன்று வகையான நடத்தையின் கோலங்கள் உண்டு.

முதலாவது - பாரம்பரியப் போக்கு உடையவர். "ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?" என்றால் "அப்படித்தான்" என்று அடிமை மனம் கொண்டவராக இருப்பவர். அர்த்தங்களைப் புரிந்து கொள்ளாது கூட்டத்தோடு கோவிந்தா போடுபவர் இப்படிப்பட்டவர். பரிசேயர்களும் பாரம்பரியங்களுக்கும் சட்டங்களுக்கும் அளவுக்கு மீறிய முக்கியத்துவம் வழங்கி அவற்றை நுணுக்கமாக அனுசரிப்பதில் மதிப்பும் பெற வழி தேடினர். சட்டங்களை மனித மாண்பிலும் பார்க்க மதித்ததால் இயேசு இவர்களைக் கண்டித்து உதட்டினால் அல்ல உள்ளத்தால் இறைவனைப் போற்றக் கற்றுக் கொடுக்கிறார்,

இரண்டாவது— தமக்கு வசதியானதை நியாயப்படுத்துபவர். இப்படிப்பட்டவர் தமக்கு விருப்பமானவற்றையே தேடிச் 'சௌகரியம்' என்ற கூட்டில் தஞ்சம் புகுபவர். சரியோ, பிழையோ என்ற மனச்சாட்சியின் குரலுக்குச் செவிமடுக்காது கால் போன போக்கில் செல்லும் ஊதாரித்தனமானவர்கள். இஸ்ராயேல் மக்கள் இப்படிப்பட்ட நடத்தை கொண்டவராகத் திகழ்ந்தனர். இறைவன் காட்டிய அன்பையும், நேரிய வழியையும் மறந்து வயிறும், தோலும் தான் பெரிது என மதித்தவர்கள். உப ஆகமத்தில் தம் மக்கள் கடைப்பிடித்து வாழ வேண்டிய ஒழுக்க நெறிகள் ஊடாக இறைவன் அவர்களை வழிநடத்துகிறார்.

மூன்றாவது – கொள்கைப் பிடிப்பு உள்ளவர்கள். இவர்கள் மேற்கூறிய இருவகையானவரிலும் வேறுபட்டவர்கள் உண்மையை உள்ளபடி ஏற்று அதை உள்ளத்தில் ஆழ இருத்தி அதன்படி ஒழுக முயற்சிப்பவர் "உங்கள் உள்ளத்தில் ஊன்றப் பெற்ற வார்த்தையை அமைந்த மனத்தோடு ஏற்றுக் கொள்ளுங்கள். அதன்படி நடப்பவர்களாயும் இருங்கள்" எனப் புனித யாகப்பர் கூறும் அறிவுரை இதை ஒத்ததாகும்,

இயேசு மனித பாரம்பரியங்களிலும், தம் சொந்த சௌகரியங்களிலும் தம் வாழ்க்கையைக் கட்டி எழுப்பாது; தந்தையாகிய இறைவனின் சித்தத்தை ஏற்று கொள்கைப் பிடிப்புள்ளவராகத் திகழ்ந்தவர். இறைவார்த்தையை வாழ்வாக வடித்தவராதலால் அவரது அகமும், புறமும்; வார்த்தையிலும், வாழ்விலும்; தெய்வீகத்திலும் மனித இயல்பிலும் முரண்பாடுகள் இருக்கவில்லை. அவர் நேரிய, உயர்ந்த, சீரிய மதிப்புள்ள மனிதனாகக்காணப்பட்டார்.

சுவாமி— ஜீவா போல். அ.மதி.

அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை,
26-8-88

அன்பு இளம் உள்ளங்களே

கடமையே
கருத்தாய்க்கொண்டு
இடப்படும் பணிபுரிவீர்
பசிக்கின்ற மாந்தர்க்கு
புசிக்கின்ற வழிகாட்டுவீர்

பெருமையாகப் பேசாது
பெரியவராய் வாழ்ந்திடுவீர்

நல்லவைகள் பலபுரிந்து
வல்லவராய் திகழ்ந்திடுவீர்

தூய்மையின் துணைகொண்டு
வாய்மையில் வழிநடப்பீர்

துன்பங்கள் தொடர்ந்தாலும்
துணிவினைத் துறக்காதீர்

நாசவேலைகள் செய்து
நீசராய் வாழாதீர்

உதவி செய்யாவிடினும்
உபத்திரவம் கொடுக்காதீர்




பிறர்கன்னத்தில்
அறைபடும் பொழுது
மறுகன்னத்தைக் காட்டாதீர்!

அன்பு நெஞ்சன் வி. பி.

---

உங்களது வாழ்க்கையில் நிகழ்ந்த மறக்கமுடியாத அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள் வெள்ளைத்தாளில ஒருபக்கத்தில் மட்டும் எழுதினால் போதும்

வி. பி.

---

## ‘கை’களைக் கண்டு பிடியுங்கள்

நினைப்பது நிறைவேறும் என எதிர்பார்க்கும் “கை” — நம்பிக்கை
புலியின் ஒருவகை இனமான “கை” — வேங்கை
ஆடவன் மணக்கும் “கை” — மங்கை
சுய ஒளியால் பிரகாசிக்கும் ஒரு வகைக் “கை” — தாரகை
பிறந்து இறக்கும் வரையுள்ள “கை” — வாழ்க்கை
அழும் குழந்தைக்குப் பாலூட்டும் “கை” — கொங்கை
நம்பியின் எதிர்பாற் பொருள் தரும் “கை” — நங்கை
ஒருவன் தனக்குள் நிலைநாட்டும் “கை” — கொள்கை
நோயிலிருந்து நீங்கப் பாவிக்கும் ‘கை” — குளிகை

யோசவ் டெனிஸ்லாஸ்
புனித வளனார் குருமடம்,
கொழும்புத்துறை.

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு-28

அடைக்கலம்:- அண்ணை, எல்லா நாட்டாலையும் உதவிகள் வருகுதாம் அண்ணை எங்கட சங்கத்துக்கு... இனி என்ன குறை எங்களுக்கு?

குருசுமுத்தண்ணை:- ஓம்... ஓம். வளர்ச்சிக்கு உதவப் பல நாடுகள் அனுப்பின பணத்தை வட்டிக்குப் போட்டிட்டு, கணக்குப் பாக்கிற சங்கங்கள் பெருகுது ஒழிய இளைஞர் வாழ்க்கைக்கு வழிகாட்ட எந்தத் திட்டமும் போட்டினம் இல்லைப் பார் தம்பி, வட்டிக்கு குட்டி எத்தனை? எண்டுதான் பார்ப்பினம் பேச்சில மட்டும் தான் அபிவிருத்தி, செயலில எல்லாரும் பதுக்கல் பேர்வழிதான் தம்பி.

## தீயன தீர்ந்திட

கற்றுவிட்டாய் பொய் சொல்ல - மனிதா
அதை நீ தவிர்த்திட வேண்டுமே - மனிதா
மெய் சொல்லி வாழ்ந்திட்டால் - நீயும்
வான் வீடு அடைந்திடுவாய் உண்மையிலே

தன்னல வாழ்க்கைதனை வாழ்ந்துவிட்டாய் - மனிதா
கூடாத பழக்கமல்லா அது - எனவே
திருந்திடல் வேண்டுமே நீயும் - உனது
வாழ்க்கையைத் திருத்திடல் வேண்டுமே நீ

ஏன் பட்டாய் பெருமை - மனிதா
ஏன் பட்டாய் பெருமை
நற் பலன் வருமா உனக்கு - இல்லை
நரகம் தான் கிடைக்கும் உனக்கு

இத்தனை மட்டுமல்ல தீயவை - இன்னும்
எத்தனையோ உள்ளன தீயவை
அத்தனையும் நீ இழந்துவிட்டால் - உனக்கு
வான்வீடு சொந்தமென நினைத்துவிடு

அ. டெஸ்மன் டிலான்

## அறிஞர் வாக்கு

வீரம் என்பது, உடல் வலிமையைப் பொறுத்ததன்று, உள்ளத்தின் உறுதியைப் பொறுத்ததாகும்.

— மாண்டெய்ன்.

காலத்தின் நிலையை அறிந்து கொள். காலமே உன் உயிர். அதை வீணாக்குவது உன்னையே நீ கொலை செய்து கொள்வது போலாகும்.

— ஜேம்ஸ்லென்.

நம்பிக்கை உணர்வும், உண்மையும் கொண்ட பிரார்த்தனைகள் மலைகளையும் அசைத்திடும் வலிமை பெறுகின்றன.

— எஜென்.

உறக்கம், செல்வங்கள், ஆரோக்கியம். மற்றும் இவ்வோர் அருட்பேறும் இடையிடையே நின்று, பின்னல் மீண்டும் வந்தால் தான் முழு அனுபவம் கிட்டும்.

— ரிச்டேர்

தவறான காலத்தில் புத்திசாலித்தனத்தைக் காட்டுவதை விடச் சரியான சமயத்தில் தவறு செய்வதே மேல்.

— கரோலிவில்ஸ்.

தியாகத்தால் உலகசாந்தி உயரும் சக்திப்பெருக்கால் போரே வளரும். பேராசையை அடக்கிக் கருணையை வளர்த்தால் எங்கும் சாந்தி நிலவும்.

— தாகூர்.

குழந்தைகளின் இதயத்திலும், வாயிலும் வரும் கடவுளின் பெயர் தான் அம்மா.

— தாக்கரே.

மொழி என்பது, சாதனமேயன்றி லட்சியமன்று, கருத்தைக் கூறுவதே நம் நோக்கம், அதற்குரிய ஆயுதமே மொழி.

— ரெய்னல்ட்ஸ்.

தொகுப்பு :-
றெபிஸன் செலஸ்தீன்
தாழையடி

### சிறுமையும்-பெருமையும்-1

பனையிலே அங்குமிங்கும் சரசரவென ஆடிக்கொண்டிருந்த காவோலையை நோக்கி குருத்தோலை “ஏ! இவ்வளவு காலம் சென்றும் நீ இருக்கிறாயே உன்னால் எனக்கும் என் சகோதரர்களுக்கும் நிம்மதியே இல்லை” என்றது. அந்நேரம் பனையிலேறி வந்த ஒருவன் பாய் இழைப்பதற்காக குருத்தோலையை வெட்டினான். குருத்தோலை விழுவதைப் பார்த்த காவோலை மனம் புழுங்கி வருந்தியது.

—பெரியவர்கள் பிழைவிடும் போது சிறியவர்கள் சிரிப்பார்கள். சிறியவர்கள் தவறும் போது பெரியவர்கள் வருந்துவார்கள்.

—D. ரட்ணராஜ் இளவாலை

---

## புதுக்குறள்

சிரித்து மகிழ்வதற்கே.
கற்கக் கசடறக் கற்பவை
கற்றபின் கற்றகொப்பியை
கச்சான் காறிக்கு விற்க.

ஈன்ற பொழுதில்
பெரிதுவக்கும் தன்மகனை
சண்டைக்காரன் எனக்
கேட்ட தாய்.

எப்பொருள் யார்யார் வாய்க்
கேட்பினும் அப்பொருள்
விற்றுக் காசுபெறுவதே அறிவு.

மகன் தந்தைக்காற்றும் உதவி
இவன்தந்தை என்கொடுமை
செய்தானோ. யாரைக்
கொன்றானோ

‘குழந்தை’ அன்புராஜ்




## குடும்பம் சமூகத்தின் அங்கம்.

குடும்பத்தில் மனைவி என்பவள் வாழ்க்கைத் துணைவியாவாள். மனைக்கு உரியவள் ஆவாள். மனையை ஆள்பவள் ஆவாள். அவளிடம் சிறு மனக்கஷ்டம் படிந்தாலும் வாழ்வை அது பெரும் அளவுக்குப்பாதித்து விடும். அதனால் மனைவியை மகிழ்வுடன் வைத்திருப்பது கணவனுடைய கடமை

குடும்பத்தின் உயிர் நாடியே மனைவிதான். ஆணை அழிக்கவோ ஆக்கவோ செய்யும் சக்தி படைத்தவள் மனைவி. இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றுமில்லை.

வாழ்வின் கஷ்டநஷ்டங்கள் யாவிலும் கணவனுக்கு கைகொடுத்து உதவுபவள் மனைவியே. தாயிடமோ, சகோதரியிடமோ மற்ற உறவினரிடமோ பெற முடியாத ஒரு ஆறுதல் சக்தியை. உணர்ச்சிகளை, அமைதியை, மன உறுதியை, நாமும் வாழமுடியும் என்ற ஒரு நம்பிக்கையைக் குடும்பத்தில் மனைவியிடமிருந்துதான் பெறமுடியும்.

வாழ்கையில், தொழிலில் சோர்வு ஏற்படுகிறதா? தோல்வியும், ஏமாற்றமும் காணப்படுகிறதா? கஷ்ட நஷ்டங்களை சமாளிக்க முடியவில்லையா? உற்சாகம் இல்லையா? இன்பம் தேவையா? நல்வழியில் செல்ல வழி தெரியவில்லையா? இவற்றையெல்லாம் சரிக்கட்டுவதற்கு ஒரு நபர் மட்டும் போதும்- அந்த நபர் மனைவிதான்.

மனைவி என்றதும் ஏதோ. எங்கிருந்தோ விலைக்கு வாங்கி வந்த அடிமை என்ற நினைப்பு ஆண்மனதை விட்டு விலகவேண்டும். மனைவி தனக்குக் கட்டுப்பட்டு நடக்கிறவள் என்ற காரணத்தால் தன்னையே கதி என நம்பி வாழ்வைத் துவங்க வந்திருக்கும் ஒரே காரணத்தால் அவளை எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம் என்ற எண்ணம் அடியோடு ஒழிய வேண்டும்.

மனைவி ஒரு வேலைக்காரி என்ற அபிப்பிராயத்தை விட்டுவிட வேண்டும். அவளும் மனித இனத்தைச் சேர்ந்தவள்தான். வாழ்வில் அவளுக்கும் பங்குண்டு என்பதனை மறந்துவிடக்கூடாது. கணவன் தேவையை அவள் கவனிப்பது போலவே அவளுடைய தேவையை அவன் கவனிக்க வேண்டும்.

கணவனும் மனைவியும் கூட்டுச்சேர்ந்து இன்ப துன்பம் என்னும் பலசரக்கு கடை ஒன்றை திறந்து வைத்து நடத்துவது தான் குடும்பம். கூட்டாளிகளில் இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் நட்புறவு கொண்டு ஒருவர் மனதை மற்றவர் புரிந்து சமார்த்தியமாக நடந்து கொண்டால் தான் குடும்பக்கடையில் இன்பம் என்னும் இலாபம் அதிகரிக்கும்.

வருவாயை அதிகப்படுத்துவதில் தான் கணவன் கவனம் எல்லாம் இருக்க வேண்டும். கடுமையான உழைப்பு விடாமுயற்சி நம்பிக்கை இவை இருந்தால் தான் வருவாயை அதிகப்படுத்த முடியும். குடும்பத்திற்காகப்பணிபுரிவது அவனுடைய முக்கிய பொறுப்பாகும்.

அதிக வருவாய் பெற வழிவகுக்க முயற்சி செய்வது சிறப்புத்தான். ஆனால் அந்த சமயம் உடல்நிலை பாதிக்கப்படாமல் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியம் உடல் வலிமையும் மன அமைதியும் இழந்து அதிகமாகச் சம்பாதித்து என்ன பயன்? உடலுக்கு ஊறு ஏற்படாமல் சம்பாதித்து அளவானபடி செலவழிப்பது தான் அறிவுடமையாகும்.

குடும்பம் என்பது இறைவனின் சமுதாயம். இல்லம் என்பதைப் பிரித்தால் இல்+அம் என்று பிரியும். இல் என்றால் இருத்தல் என்றும் அம் என்றால் அழகு என்றும் பொருள். அழகாக இருப்பதே இல்லம் ஆகும். குடும்ப வாழ்க்கை என்பது பெருத்த பாதுகாப்பை அளிக்கிறது. இது கவசமாக இருந்து உறுதுணையாகக் காக்கிறது. வாழ்க்கைப் போராட்டத்தில் மனதில் ஏற்படும் தழும்புகளைக் குடும்பம் குணமாக்குகிறது. (தொடரும்)

அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

# அருள் வாக்கு அறிவோம்

திருமறைப்பணி நிலையம்

## பெரிய இறைவாக்கினர்கள்-9

## எசெக்கியேல்—IV

த. பெ. இல. 2,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

எசெக்கியேல் ஆகமத்தின் 33 தொடக்கம் 48 வரையிலான அதிகாரங்களைக் கொண்ட இறுதிப்பகுதியை இதிலே பார்ப்போம். இப்பகுதி இஸ்ராயேல் மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதாகவும் ஆறுதல் அளிப்பதாகவும் உள்ளது.

ஏற்கனவே நாடுகடத்தப்பட்ட யூத மக்கள் இன்னும் தங்கள் சொந்த நாட்டையும், ஜெருசலேம் நகரத்தையும், ஆலயத்தையும் பற்றிப் பெருமைகொண்டிருந்தனர். எசேக்கியேலின் கடுமையான எச்சரிக்கைகளைக் கேட்டிருப்பினும், ஜெருசலேமை அழிக்க எவராலும் முடியாது என்று இறுமாந்திருந்தனர். ஆனால் 587இல் ஜெருசலேம் முற்றாக அழிக்கப்பட்டு மிகுதியானோர் அடிமைகளாகக் கடத்தப்பட்டுக் கொண்டுவரப்பட்டபோது இஸ்ராயேலர் தமது நம்பிக்கையை முற்றாக இழக்கத்தொடங்கினர் இனி தமது மண்ணிற்குத் திரும்பமுடியாது என எண்ணித் தளர்ந்து போயினர். இஸ்ராயேல் இனம் இறந்து விட்டது என எண்ணினர்.

இந்த இக்கட்டான வேளையில்தான் இறைவாக்கினர் தமது வார்த்தைகளால் அவர்களுக்கு ஆறுதலும், தேறுதலுமாக இருந்து கொண்டு, அவர்கள் நிட்சயமாகத் திரும்ப தம் தாய் நாடு செல்வார்கள் என நம்பிக்கையூட்டுகிறார் இதை உலர்ந்த எலும்புகள் உருவம் பெறும் உவமைமூலம் விளக்குகிறார். அதே வேளையில் இஸ்ராயேல் இனம் தாம் செய்த தவறுகளுக்காகத்தான் இப்படித் துன்பப்படவேண்டியுள்ளது என்பதையும், இஸ்ராயேலரின் தலைவர்களும், மேய்ப்பர்களும், குருக்களும் தம்பணியிலிருந்து தவறி மக்களை தவறாக வழிநடத்தி விட்டார்கள் என்பதையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

இப்படித் தவறாக வழிநடத்தும் பழைய தலைவர்களுக்கும், ஆயர்களுக்கும் முடிவிழாப் போடும் இறைவாக்கினர், இனி இஸ்ராயேலரை வழிநடத்தப் புதிய ஆயனாக மெசியாவருவார் என்றும், அவரின் தலைமைத்துவத்தில் வரப்போவது ஒரு புதிய ஜெருசலேம், புதிய ஆலயம், புதிய இதயம் கொண்டபுதிய மக்கள் என மொழிவது இங்கே முக்கிய அம்சமாகும்.

அடுத்த இதழில் இறைவாக்கினர் தானியேல்

இரா. சூசைநாதன்

அறிந்து கொள்ளுங்கள் 49

## சீனாய் மலை நோக்கி

இஸ்ராயேல் மக்கள் இறைவனுக்குப் பலியிட மட்டும் பாலைவனம் போகவில்லை. எகிப்தைவிட்டு முழுமையாக ஓடி விட்டார்கள் என்று உணர்ந்த எகிப்தியரும், பாரவோனும் இஸ்ராயேல் மக்களைத் துரத்திப் பிடிக்கச் சென்றனர் காரணம் தங்களுக்குப் பயன்பட்ட அடிமைகளை அவர்கள் இழக்க விரும்பவில்லை.

கடலைக் கடந்தபின் மக்களைச் சீனாய் மலைக்கு அழைத்துச் செல்ல வேண்டியது மோயீசனது பெரும் கடமையாகும் (யாத். 3: 12) அவர்கள் சீனாய்மலை நோக்கிப் புறப்பட்டனர். அப்பயணத்தில் சிறப்புப் பெற்ற இடங்கள் யாத். 15: 22) பின் தரப்படுகின்றது சூர் என்ற ஆள் நடமாட்டமில்லாத பாலை வனம் வழியாக மூன்று நாள் பயணம் செய்து மாரா நீரூற்றுக்கு வந்தனர். மாரா என்றால் கசப்பு இன்று மாராவைக் குறிக்க இரு இடங்களைக் காட்டுவர். ஒன்று மோயீசன் கிணறு எனப்படும் அயின் மூசாவாகும். இது நாணற் கடலிருந்து 25 கல் தொலையுள்ளது. மற்றது 40 கல் தொலையிலுள்ள அயின் ஹவாரா என்பது. மாரா என்ற இடத்தில் தான் கடவுளின் கட்டளைப்படி மரத்தைக் கிணற்றில் போட்டு கசப்பு நீரைக் குடி நீராக மோயீசன் மாற்றினார்.

மாராவிலிருந்து புறப்பட்டு எலிம் என்ற பாலைவனச் சோலை வந்தனர். இங்கு 12 நீரூற்றுக்களும் 70 ஈச்சமரங்களும் இருந்ததாகத் தெரிகிறது. எலிமிலிருந்து புறப்பட்டு சின் பாலைவனம் வழி சென்று 75 கல் தொலைவுள்ள இராப் பிதிம் என்ற இடத்தை அடைந்தனர். இங்கு அமலேசித்தருடன் போர் செய்தனர்.

இவை பாலைவனமானாலும் புல்வெளியாகும். ஆடு மாடுகளுக்குப் போதிய புல் இருந்தது. வரட்சிக் காலத்தில் போதிய உணவு மக்களுக்குக் கிடைக்காது. இங்குதான் மக்களின் முறைப்பாட்டைக் கேட்டுக் கடவுள் மன்னா (யாத். 16: 14) காடை யாத். 16: 13) பாறையிலிருந்து நீர் (யாத். 17: 6) என்பன அளிக்கிறார். இவ்விடயங்களில் கடவுள் இயற்கை நிகழ்ச்சிகளைப் பயன்படுத்தி உணவு அளிக்கிறார்.

இ. ம. ஜெயசீலன்

## கேள்வியும் பதிலும்

(சென்றவாரத் தொடர்)

J பேர்த்தியர் (J Berthier M. S.: 1887) என்பவரின் கூற்றின்படி.

ஐந்தாகமம் - மோயீசன்
யோசுவா - யோசுவா
நடுவருந் - சாமுவேல்
1. சாமுவேல் - சாமுவேல்
2. சாமுவேல் - நாத்தான் காத்
1. 2. அரச - எரேமியாஸ்
(அ.) எஸ்திராஸ்
1. 2. நாளா - எஸ்திராஸ்
தொபியாஸ் - தொபியாஸ்
யூதித் - யோவாக்கீம் பெரிய குரு.
எஸ்தர் - மர்தோக்கேயஸ்.
யோப் - யோப்.
சங். - பெரும்பான்மை தாவீதுடையது.
பழமொழி, சங் திருவுரை - உன்னத சங். - சாலமோன்
ஞானாகமம் - 70 விளக்க உரையாளர்களுள் ஒருவர்

ஆனால் தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் தோழன் 'மறைநூல்வழிகாட்டி 1967ல் உள்ளபடி, இக் கூற்றை முற்றிலும் ஏற்பதற்கில்லை என வெளியிடப்பட்டுள்ளது.

12. கடவுள் ஆசிரியர் என்று கூறுவதேன்?

திருநூல் பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் எழுதப்பட்டவை. இறைவனை ஆசிரியராகக் கொண்டுள்ளவை.

இறைவெளிப்பாடு II)

13. மனிதரும் ஆசிரியர் என்று கூறுவதேன்?

திருநூல்களை உருவாக்க இறைவன் மனிதர்களைத் தெரிந்து கொண்டார். இறைவன் அவர்களில், அவர்கள் வழியாக செயலாற்ற, அவர்கள் தங்கள் திறமைகளையும், ஆற்றல்களையும் பயன்படுத்தி உண்மையான ஆசிரியர்கள் என்ற முறையில் தாம் விரும்பிய எல்லாவற்றையும் அவற்றை மட்டுமே எழுத்தில் வடிக்குமாறு இறைவன் அவர்களை பயன்படுத்தினார். (வெளிப்பாடு II)

14 பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் இறைநூல்கள் எழுதபபட்டவை என்பதற்குச் சான்றுகள் தருக:-

காண்க. 2 தீமோ. 3:16
2 இரா. 1 : 19-21

15 திருநூல் எழுதப்பட்ட காலம் எது?

பழைய ஏற்பாட்டு நூல்களின் ஆசிரியர்களை நிட்சயப்படுத்தி கூற முடியாது என்றாலும் புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களின் காலங்களையும், ஆசிரியர்களையும் கிட்டத்தட்ட நிட்சயப்படுத்திக் கூறலாம. பொதுவாகக் கூறுமிடத்து திருநூல் எழுதப்பட்ட சுமார் கி.மு. 1000 ஆண்டுகளாயிற்று. பழைய ஏற்பாட்டு நூல்களைப் பொறுத்தமட்டில் காலத்தை வரையறுத்துச் சொல்வது கடினம புதிய ஏ. பொறுத்தமட்டில் எழுதப்பட்டு காலங்கள்:

கி.பி. 5 1.2 தெசலோனி
கி.பி. 56 பிலிப்பியர்.
கி.பி. 57 கலாத்தியர்.
1, 2 கொரிந்தியர்
கி.பி. 57, 58 உரோமையர்
கி.பி. 61 - 63 கொலேசியர்.
எபேசியர்
கி.பி. பிலமோன்.
கி.பி. 65 1 திமோ. தீத்து.
கி.பி. 67 2 திமோத்தேயு.
கி.பி. 58 - 62 யாகப்பர்.
கி.பி. 64 - 67 1இராயப்பர்
கி.பி. 65 - 70 மாற்கு.
கி.பி. 70 - 85 லூக்காஸ்.
அப். பணி.
கி.பி. 65 75 மத்தேயு.
கி.பி. 65 - 90 எபிரேயர்.
கி.பி. 70 - 80 யூதா.
கி.பி. 80 - 100
2 இராயப்பர்.
கி.பி. 90 - 100
1, 2, 3 அருளப்பர்.
கி.பி. 85 - 100 அருளப்பர்
திரு. வெளிப்பாடு.

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 2<br>சுடர்: 23 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |

### அங்கத்துவம்:

| | | | |
|---|---|---|---|
| 109 | ஜெ. அ. அஞ்சலிற்றே | 6 | மன்/நானாட்டான் ம. வி. |
| 110 | ஸ். அன்ரனிற்று | 11 | யாழ். கன்னியர் ம. ம. வி. |
| 111 | ஸ். அஞ்சலோ | 7 | யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரி |

### அன்பு விழியின் அன்புக்குரல்

5-8-88இல் உங்கள் சிந்தனைக்குத் தந்த கருவைக் கவனியுங்கள். படைப்பாளிக்கும் அவரது படைப்புக்கும் புத்துயிர் அளிக்க நாம் என்ன செய்யலாம்? என்ற வினவுக்குரிய விடையாக உங்கள் படைப்பு அமையட்டும். 27-9-88க்குள் உங்கள் படைப்பை அனுப்புங்கள். அங்கத்துவ எண்ணை எழுத மறக்க வேண்டாம். அடுத்த இதழில் 'புதிர்' வரும், மகிழ்ச்சிதானே.

நன்றி வணக்கம்.
அன்பின்
அன்பு விழி

* * *

### மிகச் சிறந்த தேர்வு

இப்பகுதியில் வரும் 20 வினாக்களும் பன்முகப்படுத்தப்பட்ட வினாக்களாகும். நான்கு விடைகளும் சரியாகவே தோன்றும். ஆனால் நீங்கள் மிகச்சிறந்ததைத் தெரிந்தெடுத்து, விடைகளை அறிவிக்கும் பொழுது அனுப்பவும். வாரம் தோறும் 5 வினாக்களாக நான்கு வாரங்களுக்கும் தொடர்ந்து வரும். தொடர்ந்து படியுங்கள்.

1. நன்மை தீமை எதுவெனக்காட்டுவது:
   (i) நமது பெற்றோர் ஆசிரியர், படிப்பினைகள்
   (ii) நாம் பெற்ற அருளுயிர்.
   (iii) நமது மனச்சான்று.
   (iv) சட்டங்களும் கட்டளைகளும்.

2. புதிய வாழ்வின் ஊற்றாக விளங்கும் திருவருட்சாதனம்:
   (i) திருமுழுக்கு. (ii) தேவநற்கருணை. (iii) பச்சாத்தாபம். (iv) நோயில் பூசுதல்.

3. நிறைவான மனமாற்றம் உண்டாவது:
   (i) தண்டனையால் (ii) அச்சத்தால் (iii) அன்பினால்.
   (iv) பெலவீனத்தால்.

4. பிறரின் ஆன்ம ஈடேற்றத்தில் நமக்குள்ள பங்கு:
   (i) தியாகம் செய்தல். (ii) தருமம் செய்தல். (iii) கடன் வழங்குதல். (iv) நற்செயல்களைப் புரிதல்.

5. சமூகத்தில் வாழும் நான்:
   (i) அயலவருடன் சண்டையிடாதிருப்பேன். (ii) உடன் மாணவருக்கு உதவி செய்வேன். (iii) சமூக நீதிக்காக உழைப்பேன் (iv) சமூகத்தில் வாழும் பெரியாரைக் கௌரவிப்பேன்.

* * *

### மகனே உன் தந்தையின் முதுமையில் ஆதரி

இளமையின் பருவத்தில்
இளம் கதிரவனைப் போல
வளருகின்ற மகனே—உன்
தந்தையின் முதுமையின் பருவத்தில்
முத்தமிழின் விளக்கமாக
முத்தமிட்டுக் காப்பாயோ !
முத்தமிழ் மகனே !!
இளமையின் பருவத்தில்
இறை இன்பத்துடன்.
வாழும் மகனே—உன்
தந்தையின் முதுமையில்
ஆதரித்துக் காத்திடுவாய்.

(சீராக் ஆகமம் 3: 14)

பி. றஞ்சிற் ருஸ்போல்ட்
அங். என். 87.

## ஜீன் பிகாட்டும்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

எழுப்புகிறது. இலங்கையில் 24 வருடம் மறைப்பணி புரிந்த ஜோசவ் வாஸ் முனிவர் இந் நாட்டு மக்கள் எவரையும் ஏன் குருத்துவத்துக்குத் தெரிந்து கொள்ளவில்லை? அதுமட்டு மல்ல. அவர் வழிவந்த ஒறட் டோரியன் சபைக் குருக்களும் அடுத்த 120 ஆண்டுகளில் அதைச் செய்யவில்லை.

இது எமது வணக்கத்திற் குரிய அவரது மதிப்பைக் குறைப்பதாகத் தோன்றலாம். ஆனல் இக்கேள்வியை நாம் கேட்டு அதற்கு விடைகாண வேண்டும். இல்லாவிட்டால் அது எதிர்வாதியால் புனிதர் பட்டம் அளிக்கும் கோரிக் கைக்கு எதிராகப் பயன்படுத் தப்படலாம்.

சுருக்கமாகக் கூறப்போனல் விடை இதுதான். ஒரு மறை பரப்பாளராக, ஒறட்டோரி யன் குழுவின் அதிபராக, இலங் கையின் குரு முதல்வராகப் பிதா ஜோசவ் வாஸ் அவர்கள் பணிபுரியும் போதெல்லாம் போர்த்துக்கேய மறைபரப்பு நாடுகளில் இருந்துவந்த ஒரு முறையைக் கடைப்பிடிக்க வேண்டியிருந்தது. கோவாத் திருச்சபையிலிருந்தும், கொச் சின் ஆயரிடமிருந்துமே அவர் தமது அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டார். குருத்துவத் துக்கு ஆட்களைத் தெரிவது ஆயருடைய அதிகாரத்துக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட் டது. இன்று எமக்கு அதிசய மாகத் தோன்றினுலும், அன்று இருந்த நிர்வாக முறையின் நிலையான கொள்கை என்ன வென்றல் - இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ளவர்களை குருக்களாகத் தெரியக்கூடாது, ஏனெனில் அவர்களது கலாசா ரத்தின்படி மணத்துறவுக்குப் பொருத்தமற்றவர்களாதலால் குருத்துவத்துக்கும் ஏற்றவர்க ளல்லர் என்பதே. இந்தத் தீர் மானத்தின் இறையியல், வர லாற்று அடிப்படையை ஆராய் வதென்றல் அது வேறொரு விடயம். இந்த இடத்தில், பிதா ஜோசவ் வாஸ் அவர்கள் ஏனைய குருக்களைப்போலவே தமது விருப்புக்கும், கட்டுப் பாட்டுக்கும் அப்பாற்பட்ட சூழ்நிலைகளில் ஊறி அவற்றல் கட்டுப்படுத்தப்பட்டிருந்தார்.

வரலாற்றுக்கால இட சூழ்நிலை களைக் கருதாது ஒருவரை மற் றொருவருடன் ஒப்பிட்டு, ஒரு வரை எல்லாரிலும் பெரியவர் என்று கூறுவது நியாயமற் றது. (அறிவியலுக்கும் பொருந் தாதது) இத்தகைய ஒப்பீடுகள் எதிர்வாதியின் கரத்தையே பலப்படுத்தும்.

பிதா ஜோசவ் வாஸ் அவர் களே குருத்துவத்தை அடையக் கூடியதாக இருந்தது, கோவை யர்களைப் பொறுத்தமட்டில் இந்த நிர்வாக முறை ஒரு விதி விலக்கு அளித்தமையால்தான். கோவையர்கள் முழு கலாசார மாற்றம் அடைந்தவர்களாக வும் போர்த்துக்கலின் முதலாந் தரப் பிரஜைகளாகவும் கருதப் பட்டனர்.

இலங்கை, இந்தியாவைச் சேர்ந்த ஏனைய மக்களைப் பொறுத்தமட்டில் இந்நிலை மாறியது 18ம் நூற்றுண்டின் பிற்பகுதியில்தான்.

அப்போஸ்தல ஆயர்கள் நியமிக்கப்பட்டபின் அவர் களில் சில குறிப்பிடத்தக்க முன்னேடிகளினது முயற்சியா லும், ரோமாபுரித் திருச்சபைத் தலைவர்களின் வற்புறுத்தலா லும் படிப்படியாக அந்த ஆயர் கள் (அநேகமாகப் பிரான்ஸிய ரும், இத்தாலியரும்,) சுதேச குருக்களை அனுமதித்து, உரு வாக்கும் முயற்சியை மேற் கொண்டனர்.

இதை இறுதியாகத் தீர்மா னித்தது என்னவென்றல் 1886ல் பாப்பரசர் 13ம் சிங்க ராயர் இந்தியாவிலும் இலங் கையிலும் ஆயர்களை நியமித்த தும், 1895ல் கண்டியில் அனைத்து மறைமாவட்டங் களுக்குமாக குருமடமொன்று அமைக்கப்பட்டதுமாகும்.

இதுதான் ஜீன் பிகாட்டும் அவளது பணியாகிய புனித இராயப்பர் சபையும் எமது வரலாற்றேடு சேர்கின்ற கட் டம் ஆகும்.

இதே சமயத்தில், ஆதி காலத்திலிருந்தே, நிச்சயமாக 6ம் நூற்றுண்டிலிருந்து, புனித தோமையார் வழிவந்த கிறிஸ் தவர்கள் குழு, முழு சுதேச சபையாக, சுதேசக் குருக்கள் திருத்தொண்டர், ஆயர்களைக் கொண்டதாய், மக்களின் மொழிக்கும் பழக்கவழக்கத் திற்கும் பொருத்தமான வழி பாட்டுமுறையொன்றை உடை யதாக இயங்கிவந்தது.

எமது வரலாற்றிலுள்ள ஒரு வருந்தத்தக்க காரியம் என்ன வென்றல் லத்தீன் நாடுகளி லிருந்து பிற்காலத்தில் (16ம் நூற்றுண்டு) வந்த தவறுன அபிப்பிராயங்களுள்ள மறை பரப்பாளர் இந்தப் பழமை யான குழுக்களை ஒதுக்கித் தள்ளிவிட்டனர். ஓர் உண்மை யான கத்தோலிக்க இந்தியா வுக்கு இது குந்தகமாக அமைந் தது. நல்ல வேளையாக இதை நாம் எல்லோரும் இன்று உணர்கின்றேம். திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரின் ஊக்க மான தூண்டுதலினல், சம மான பங்களிப்பினல் இதைச் சரிப்படுத்த உறுதிகொண்ட வர்களாய் இருக்கிறேம்.

இத்தகைய ஒரு பிரகடன மின்றி எமது சுதேசக் குருக் கள் நூற்றுண்டு விழா நிறை வுடையதாகாது.

நிகழ்ச்சி நிரலில் இருந்தா லென்ன இல்லாவிட்டா லென்ன வீரநங்கை ஜீன் பிகாட்டும் அவளது அன்னை ஸ்டெப்னியும் இதை நடத்தி வைப்பார்களாக.

ஜோ. குளோட் லாரன்ஸ்
அ.ம.தி.
கொழும்பு, 1988 ஆகஸ்ட் 3

---

**ஆண்டின் 22-ம் ஞாயிறு (28-8-88)—வாசகம்**

உபஆகமம் 4: 1-2, 6-8 ஆண்டவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு ஒழுகுவீர்கள்.

யாகப்பர் 1: 17 - 22 இறைவார்த்தையின்படி நடப்பவர் களாயிருங்கள்.

மாற்கு 7 : 1 - 23 கடவுளுடைய கட்டளைகளைக் கைவிடாதீர்.

---

## உங்களுக்குத் தெரியுமா? போட்டி—18

பாதுகாவலன்பத்திரிகையில்(ஜூலை-8-ஆகஸ்டு26)வினவுக்குரிய சரியான விடையைக் கண்டுபிடித்து வின இலக்கத்தையும் சரி யான விடையையும் தபால் அட்டையில் தெளிவாக எழுதி 15-9-88க்குமுன், பாதுகாவலன் அ. பெ. இல 2 யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். விடையும், பரிசுபெறுப வர் பெயரும், அடுத்த போட்டியும் 30--88-9ல் வெளிவரும். பரிசு ரூபா 25/-

### வினக்கள்

1. மரியாளின் விண்ணேற்பு பற்றிய சத்தியம் யாரால் வரையறுக்கப்பட்டது?
2. திருநூல் ஏடுகள் எப்போது, யாரால், அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டன?
3. ஆசாரத்துக்குரிய யோசே வாஸ் முனிவரைப் புனிதராக்கப் போதிய ஆதாரங்கள் உள்ளனவா? என நேரில் கண்டறிய வருகை தந்த புனிதர் ஊக்குவிப்பாளரின் பெயர் என்ன?
4. பாப்பரசரின் மறை பரப்புத் துணைச் சபைகளின் அனைத்துலக தலைவர் யார்?
5. 'மீட்பரின் அன்னை' என்னும் பொதுத் திருமுகம் எங்கே? எப்போ? யாரால் வெளியிடப்பட்டது?
6. திருநூலை நூலகம் என்று அழைப்பது ஏன்?

### போட்டி 17, சரியான விடைகள்

(1) ஏழைகட்கு நற்செய்தி அறிவிப்பு, ஒடுக்கப்பட்டோ ருக்கு உரிமை வாழ்வு, அன்னை மரியாள் மட்டில் அணையா அன்பு.

(2) காலத்தின் தேவைகளில் ஈடுபடுவதே இறைசித்தம்.

(3) 109, (4) ஜீன் பிகாட், (5) திருத்தந்தை 10ஆம் பத்திநாதர், (6) 17-6-88 பாதுகாவலனில்.

**பரிசு பெறும் நற்பேறுளர்:**

ச. சவுந்தரி 27, முதலாம் ஒழுங்கை, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

(1) L.R.கொன்ஸ்ரன்ரைன் 873 ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். (2) ஷியாமா அகஸ்ரின் 7/4ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். (3) ச. சவுந்தரி 27, 1-ம் ஒழுங்கை பழைய பூங்கா வீதி, யாழ்ப் பாணம், (4) செல்வன்ரெட்ணராஜ் ஞானரெத்தினம்புங்குடுதீவு, (5) செல்வி மேரி மாலதி ஞானரெத்தினம், புங்குடுதீவு, (6) S. ஜோசப் அன்ரன் மணிப்புரி கொழும்புத்துறை யாழ்ப்பாணம், (7) அமிர்தராசா லோகிதா 10ம் வட்டாரம் புங்குடுதீவு, (8) கிறிஸ்தோ ரேஸ் மாலினி 10ம் வட்டாரம் புங்குடுதீவு, (9) லீனஸ் சகாய றூபன் 10ம் வட்டாரம் புங்குடுதீவு, (10) K. V. சங்கர் 174 கன்னுதிட்டி ரேட், யாழ்ப்பாணம். (11) நிர்மலா அந்தோனிப்பிள்ளை வீதி, மாதகல்.

---

## இவ்வாரப் புனிதர்கள்

ஆகஸ்டு 29 புனித ஸ்நாபக அருளப்பரின் சிரம் வெட்டப்பட்டது
செப்டம்பர் 3 புனித பெரிய கிரகோரியார் - பாப்பு — மறை வல்லுநர்
செப்டம்பர் 8 புனித கன்னிமரியின் பிறப்பு
செப்டம்பர் 9 புனித கிளாவர் இராயப்பர்—யேசு சபைக் குரு

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அந்தோனிப்பிள்ளை சவரிமுத்து

பிறப்பு: 16-04-1902 இறப்பு: 29-07-1988

அன்னரின் ஆன்ம இளைப் பாற்றிக்காக 27-08-1988 சனிக்கிழமை காலை 7மணிக்கு யாழ். புனித திரேசம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக் கள், சகோதரி, பேரப்பிள்ளை கள், பூட்டப் பிள்ளைகள்.

48, சோமசுந்தரம்
அவனியூ,
யாழ்ப்பாணம். A/108.

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



சவிரிமுத்து டேவிட்

பிறப்பு: 19-11-1895 இறப்பு: 29-08-1978

29-08 1988 திங்கட்கிழமை காலை 6-15 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத் தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இத்திருப்பலியில் பங்கு கொண்டு அன்னரின் ஆன்மா சாந்தியடையச் செபிக்கும் வண்ணம் அன்புடன் அழைக் கிறேம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

2/141 மவுண்ட்
கார்மேல்வீதி,
யாழ்ப்பாணம். A/104

## இறைவனில் இணைந்த முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அஞ்சலோ இராசையா

மலர்வு: 27-10-1917 உதிர்வு: 02-08-1987

அன்பின் உருவாய் அனை வர்க்கும் இனியவராய் பண் பின் சின்னமாய் விளங்கி உலகுக்கு மறைந்து ஆண் டொன்று போனுலும் எங்கள் உள்ளத்தை விட்டு மறைக்கவும் மறக்கவும் இயலாத அஞ்சலோ இராசையாவின் ஆன்ம சாந் திக்காக 2-09-88 வெள்ளிக் கிழமை காலை 6.15 மணிக்கு யாழ். அடைக்கலமாதா ஆலயத்தில் இரங்கற்பலி ஒப் புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமகள்
பேரப்பிள்ளை.

38, சப்பல் வீதி
யாழ்ப்பாணம். A/106.

---

## 100 ஆண்டுகள்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நன்றித் திருப்பலியில் தலைமை வகிப்பார்கள். பாங் கொக் பேராயர் பேரருள்திரு கருதினுல் மிக்காய் கிற்புஞ்சு, குருமட ஆணைக்குழுத் தலைவர் களான ஆயர்கள், பெரிய குரு மடங்களின் அதிபர்கள், ஆசி யாவிலுள்ள அப்போஸ்தல ரான புனித இராயப்பர் சபை யின் தேசிய இயக்குநர்கள் ஆகியோர் இவ்வைபவத்தில் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சந்தர்ப்பத்தில், நூறு ஆண்டுகளாக மறைபரப்பு நாடுகளுக்கு குருக்களையும், துற விகளையும் அளித்த இச்சபை யையும் அதன் ஸ்தாபகர்களை தந்த அற்புத கொடைக்காக நாம் அனைவரும் ஒன்றுகூடி, இறைவனுக்கு நன்றிகூறி அவ ரைப் புகழ்வது மிகப்பொருத் தமுடைத்தாகும்.

பிதா மல்கம் ரஞ்சித்
தேசிய இயக்குநர்
பா. ம. ப. து. ச.

பாதுகாவலன்
PATHUKAVALAN

## தீவிரவாதி-புனித இராயப்பர் திருவிழா

வஞ்சியங்குளம் - வங்காலைத் துணைப்பங்கு புனித இராயப்பர் ஆலயத்திருவிழா ஆவணித் திங்கள் 1ம் நாள் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. நறுவிலிக்குளம், வஞ்சியங்குளம், புதுக்கமம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் திரிதின ஆராதனைகட்கு பல கஷ்டங்கள் மத்தியில் சமூகமளித்து தங்கள் நன்றிக்கடனைத் தங்கள் பாதுகாவலருக்குச் செலுத்திய விதம் பாராட்டுதற்குரியது.

திருவிழாவன்று கூட்டுத் திருப்பலி பங்குத்தந்தை அருள்திரு. அருள்நாதர் அடிகள் தலைமையில் நடந்தது. மறையுரையில் புனித இராயப்பரின் பண்புகள் - அவரின் மறுதலிப்பினால் நாம் கற்கவேண்டிய படிப்பினைகள் - அவரின் தாழ்ச்சியினால் பெற்ற உயர்ச்சி அவரின் தீவிரவாதத்தால் பெற்ற வேதசாட்சி மகிமை - அவரது தலைமைத்துவமும் அர்ப்பண வாழ்வும் என்பன விரிவாய் விளக்கப்பட்டு இன்றைய திருச்சபையைக் கட்டி எழுப்புவதில் வளர்ப்பதில் நாமும் புனிதரைப்போல் மாறவேண்டும் எனப்புத்துயிர் ஊட்டி மக்கள் விழிப்புறச் செய்தது மிகவும் போற்றுதற்குரியது.

திருப்பலி முடிவில் புனித இராயப்பரின் திருச்சுருபப் பவனி மிகவும் பக்திப்பரவசமாக விருத்தங்கள்பாடி இடம் பெற்றது. திருச்சுருப ஆசீரோடு விழா நிறைவெய்தியது ஈற்றில் ஆலய நிர்வாக செயலாளரால் நன்றியுரை வழங்கப்பட்டது.

வி. அ. லெம்பேட்

## பாடசாலையில் மறைவாரம்

இறைவனின் இனிய நாமத்துக்கு புகழ் பாடிய ஒரு புனித வாரம், 4. 7. 88 தொடக்கம் 8. 7. 88 வரை நெடுந்தீவு றோ. க பெண்கள் பாடசாலையின் அதிபர் சங். சகோதரி லொறன்ரினா தலைமையில் மிகுந்த பயபக்தியுடன் வெகு சிறப்பாக நடத்தப்பட்டது. ஆரம்பநாள் முதல் இறுதி நாள் வரை மறை உரைகள், சிறப்புரைகள், கருத்தரங்குகள், ஊர்வலங்கள் நாள்தோறும் நிகழ்ச்சிகளைச் சிறப்பித்தன. இதன் சிறப்பு அம்சமாக நெடு - மத்தி விநாயகர் கோவிலில் சைவ - சமய மாணவர்கள் ஆசிரியர்களுடன் அனைத்து மாணவ மாணவிகளும் சென்று சிரமதான பணியொன்று மேற்கொண்டார்கள். இப்பணியைத் தொடர்ந்து கோவில் குருக்கள் பூசை நடாத்தி அனைவருக்கும் அருளுரை வழங்கினார். சைவ சமய மாணவர்களும் மறைவாரம் முழுவதும் தங்கள் பிரார்த்தனை மண்டபத்தில் ஆசிரியர்களுடன் சேர்ந்து கத்தோலிக்க இந்து கலாச்சாரத்தை பிரதிபலிக்க சிறப்பு வழிபாடுகளை நடாத்தினார்கள். அனைவரிடமும் ஒற்றுமையை விழிப்புடன் செயற்படுத்த அரசாங்கம் இவ்வாரத்தைச் செயற்படுத்தியமை பாராட்டுக்குரியது.

பாடசாலை மாணவ மாணவிகள் இதில் முழுப் பங்கு கொண்டமை அவர்கள் மத்தியில் ஓர் இறை விழிப்பை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இறுதி நாளாகிய 8 - 7 - 88 வெள்ளிக்கிழமை 11. 30 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. பாடசாலை அதிபர் மறை நூலுக்கு மாலை அணிந்து விழாவைக் தொடங்க சிறப்பு விருந்தினராக வருகை தந்த நெடுந்தீவுப் பங்குத்தந்தை அருள்திரு. ஜெறோம் லெம்பட் அடிகளாருடன் பிரதம விருந்தினரான நெ- கொத்தணி அதிபர் இரா. சின்னத்தம்பி அவர்களும் மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சிகளைச் சிறப்பித்தார்கள். பாடசாலை மாணவ மாணவிகளால் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. பாடல்கள் நடனம், நாடகம் அனைத்தும் மறை நூலுடன் தொடர்பு பட்டிருந்தமை நிகழ்ச்சியினை மேலும்மெருகூட்டியது. கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து கொத்தணி அதிபர் சிறப்புரை வழங்க பங்குத்தந்தை மறை வாரத்தின் சிந்தனை பற்றித் தெளிவாக விளக்கினார். பாடசாலை அதிபரின் அழைப்பையேற்றுப் பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர்களும் விழாவுக்கு வருகை தந்திருந்தார்கள். இறுதியாக ஆசிரியர்களின் சொற்பொழிவுகள், அபிவிருத்திச் சங்க செயலாளரின் உரைகள் இடம் பெற்றன.

நிகழ்ச்சியின் நிறையுரையில் பாடசாலை அதிபர் தமது பாடசாலையில் உள்ள அனைத்து ஆசிரியர்களும் நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு நிகழ்ச்சிகளை இவ்வளவு குறுகிய காலத்தில் சிறப்பாக அமைத்ததற்கு நன்றியுடன் பாராட்டிப் பேசினார். நன்றியுரையுடன் பாடசாலைக்கீதத்தை மாணவ மாணவிகள் இசைக்க இனிதே நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன

தகவல்:- நெடுநகர் நேசன்

## பாடல் மலர்க் கொத்து

அமரர் அருள்திரு. மேரிபஸ்ரியன் அடிகளாரின் 3வது ஆண்டு நிறைவாக - 'உன்னோடு உறவாட' எனும் ஆலய பாடல் மலர்க்கொத்து. வங்காலை புனித ஆனாள் ஆலய முன் அரங்கில் 18.7.88 ஆலய 2ம் நவநாளின்போது பங்குத்தந்தை அருள்திரு அருள்நாதன் அடிகள் தலைமையில் வெளியிடப்பட்டது. அருள்திரு கமலஸ் நிக்கிலாஸ் அடிகள் (மறைபோதகர்) அருள்திரு றெக்ஸ்குலாஸ் அடிகள் ஆகியோரும் விழாவில் கலந்து சிறப்பித்தார்கள். சிறப்புரை நிகழ்த்திய அருள்திரு றெக்ஸ்குலாஸ் அடிகள் அமரர் மேரிபஸ்ரியனின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்துப் பேசுகையில், "அமரர்மேரிபஸ்ரியன் கல்வியும் செல்வமும் ஆன்மீக வளமும்நிறைவங்காலையை உருவாக்கத் தன்னை எத்தனையோ வழிகளில் அர்ப்பணித்துமக்கள் உள்ளங்களில் 'தாஜ் மகால்' நினைவுச் சின்னமாகத் தன்னை எழுப்பிவிட்டார். அழியா அழகுச் சிலையாக ஒவ்வொருவர் உள்ளத்திலும் இல்லத்திலும் நிறைந்துள்ளார்'' என்றார். மேலும் ''அன்னாரின் ஞாபகமாகப் புனித செசீலிமா பாடகர் குழு இச்சிறு மலர்க்கொத்தை அர்ப்பணிப்பதில் பெருமைப்படுகின்றேன். வறுமையை ஒழிக்க வங்காலை மக்களுக்கு சிறுத்தோப்புப் பாட்டை ஒதுக்குவதிலும், வன்செயலால் குடிபெயர்ந்த அகதிகட்கு வதிவிடங்கள் அமைப்பதிலும், வங்காலை ம.வி.க்கு புதிய கட்டிடங்கள் அமைப்பதிலும், சிறுபான்மை மக்களின் துயர்துடைப்பதற்கும் முன்னின்று தன்னைத் தியாகம்செய்த அமரர்க்கு நாம் என்றும் நன்றியுடையோம்'' எனப் பாராட்டினார். இரங்கற்கீதம் அவர்செய் நன்மைகளை எடுத்துரைக்கும் முகமாக புனித செசீலியா சபையாரால் இசைக்கப்பட்டது. பொறுப்பாசிரியர் திரு. அ. உவில்பிறட் சோசை நன்றியுரை வழங்க விழா முடிவுற்றது.

தகவல்:- வி. அ. லெம்பேட்

## இளவாலை புனித யாகப்பர் பங்கில் மரி அன்னைக்கு திருவிழா

புனித மரியாளின் ஆண்டிற்கான திருவிழாவை 15.8.88 அன்று பங்குத்தந்தை M.T. பற்றிக் அடிகள் பங்கில் காலை திருப்பலியுடன் ஆரம்பித்து வைத்தார்- பின் மாலை மரியன்னைக்கு ஜெபமாலை ஊர்வலம் ஒன்றை நடத்தினர். கிராமத்தின் ஓர் எல்லைப்புறத்தில் இருந்து ஆரம்பமான இவ்வூர்வலம் கிராமத்தைச்சுற்றி வலம் வந்தது. இறுதியாக அன்னையோடு அனைவரும் ஆலயத்தில் ஒன்று கூடினர். அங்கு நற்கருணை எழுந்தேற்றம் பண்ணி வைக்கப்பட்டு பங்குத்தந்தை ''மரியாளின் வாழ்வை எம் வாழ்வில் கண்டு பாவிப்பது'' பற்றி மறையுரையாற்றினார். பின் நற்கருணை ஆசீருடன் விழா இனிதே முற்றியது. பங்கு மக்கள் அனைவரும் ஒரு குட்டித்திருச்சபையாக ஒருங்கே கூடிவந்து அன்னைக்கு தாங்கள் பெற்ற உதவிகளுக்காக நன்றிகூறினர்.

தகவல்:- D. E. ரட்ணராஜ்

## புதிய அங்கத்தவர்கள் தெரிவு

மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் தலைவராக வண. பிதா. அ. சேவியர் குரூஸ் அவர்களும், செயலாளராக திரு. சின்கிலேயர் பீற்றர் அவர்களும் பொருளாளராக திரு. பசில் பெனடிக்றும் மீண்டும் ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். நான்கு மதங்களைப் பிரதிநிதித்துவப் படுத்த நான்கு உப தலைவர்களாக, சிறீ தர்மஜோதி தேரோ அவர்களும், புலவர் திரு. திருநாவுக்கரசு அவர்களும், ஜனப். எம். எம். அபுபக்கர் அவர்களும், திரு. ஏ. பி. பிசிருடோ அவர்களும் 9 - 7 - 88 அன்று தெரிவு செய்யப்பட்டனர், மேலும் 20 உறுப்பினர்கள் செயற்குழுவிற்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

## புனித பனிமய மாதா திருவிழா

மரியன்னைக்கு எந்நாளும் திருநாளோ என்று வியக்கத்தக்க முறையில் வங்காலைப் பங்கில் மரியன்னை ஆண்டின் நிறைவு தினமாக 5. 8. 88 வெள்ளியன்று புனித பனிமய மாதா திருவிழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சென்ற ஆண்டு பரிசுத்த பாப்பிறையால் பிரகடனப் படுத்தப்பட்ட மரியன்னை ஆண்டு பரிசுத்த ஆவியின் பெருவிழாவோடு ஆரம்பித்து இவ்வாண்டு ஆவணித்திங்கள் மரியன்னையின் விண்ணேற்பு விழாவுடன் நிறைவுறுவதை நினைவில் இருத்தி எந்நாளும் மரியன்னையின் புகழ்பாட வங்காலைப்பங்கு மரியாயின் சேனை மாதாசபை - வழிபாட்டுக்குழு இணைந்து பங்குத்தந்தை தலைமையில் பல விழாக்களை அன்னைக்குச் சமர்ப்பிக்கத் திட்டங்கள் தீட்டி - நிறைவு விழாவில் பங்கு மக்களை மரியன்னைக்கு ஒப்புக்கொடுக்கும் நாளாக இவ்விழாவைப் பெருமகிழ்ச்சியுடன் கொண்டாடியது குறிப்பிடத்தக்கது.

திருச்சுருபப் பவனி முடிவடைந்ததும், பங்கு மக்களைத் தேவ தாய்க்கு ஒப்புக்கொடுக்கும் செபம் பங்குத்தந்தையால் உருக்கமாகச் சொல்லப்பட்டு ஆசீரும் வழங்கப்பட்டது. மரியன்னைக்குப் புகழ்ச்சியாக 'ஆவே மறிஸ்ரெல்லா' லத்தீன் கீதம் இசைக்கப்பட்டு விழா நிறைவெய்தியது. ஈற்றில் மரியன்னையாண்டுக் குழுத்தலைவர் நன்றியுரை வழங்கினார்கள்.

வி. அ. லெம்பேட்.
(V. A. லெம்பேட்)

## புனித ஆனாள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெஸ்பர் ஆராதனையும் நற்கருணை நாதரின் திருப்பவனியும் இடம் பெற்றது. மறுநாள் காலை ஆராதனையும் நற்கருணை நாதரின் திருப்பவனியும் இடம் பெற்றது. மறுநாள் காலை 7 மணிக்கு புனித அன்னம்மாள் அன்னையரின் திருவிழா இறுதிக்கட்டமாக பங்கு மக்களாலும் அன்னையரின் தயவை நாடி ஓடி வந்த ஏனைய அயல் பங்கு மக்களாலும், அதிவந்தனைக்குரிய ஆயர் தோமஸ் ஆண்டகையின் தலைமையில் அருள்திரு. அந்தோனிப் பிள்ளை, போல் நட்சேத்திரம், அருள்நாதன், றெக்ஸ்குலாஸ் ஆகியோர் இணைந்த கூட்டுத் திருப்பலி மூலம் திருவிழா பெருவிழாவாக ஆரம்பமாகியது.

பின்பு அன்னை ஆனாளின் திருச்சுருபம் ஆலயப் பீடத்தில் அமர்த்தப்பட்டு பாரம்பரிய முறைப்படி 'பன்னிரு மன் குலத்துதித்த'' என்ற பங்கு மக்களின் சிறப்புத் தேவாரம் புனித அன்னையர்க்கு பாடப்பட்டது. இறுதியாக பங்கு மக்களுடன் யாத்திரிகரும் இணைந்து தங்கள் அனைவரையும் முழுமையாக புனித அன்னம்மாள் அன்னையார்க்கு, அர்ப்பணித்து ஒப்புக்கொடுத்த பிரியாவிடை செபம் பங்குத்தந்தை அருள்திரு. அருள் நாதன்அடிகளாரால் செபிக்கப்பட்டதை அடுத்து மன்னார் மறைவட்ட ஆயர் மேதகு தோமஸ் ஆண்டகை அவர்களால் அன்னம்மாள் அன்னையரின் திருச்சுருப ஆசீர்வழங்கப்பட்டு ''சர்வலோகநாயகி'' என்ற மங்களகீதம் கரகோசத்துடன் இசைக்கப்பட்டு திருவிழா இனிதே நிறைவெய்தியது.

தகவல்: A. M F. பீரிஸ்
(மறையாசிரியர்)

## மலையகச் செய்திகள்

பதுளைப் பேராலய நற்கருணைத் திருவிழா கடந்தமாதம் பதுளை ஆயர்தலைமையில் நடைபெற்றது. பெருந் தொகையான பக்தர்களும், மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குகளிலுமிருந்தும் வந்த விசுவாசிகள் நற்கருணைத்திருப் பவனியில் பங்கு கொண்டவிதமும் ஒழுங்கும், பக்தியும் ஏனைய சமய மக்களுக்கு வியப்பாகவும், முன்மாதிரியாகவும் இருந்தன. இவ்விழாவை மிகச் சிறப்பாகத் திட்டமிட்டு நடத்திய பங்குக்குரு இராஜநாயகம் அடிகளார் அனைவரின் பாராட்டையும் பெற்றார்.

★ பதுளைப்பங்கிற்கு உட்பட்ட நாவில என்ற தோட்டத்தில் ஒரே நாளில் 26 பேருக்குத் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது. மசுவாதிகளான ஐந்து குடும்பத்தாரைவிட இரண்டு குடும்பங்கள் இந்துக்களாவர். அருள்திரு இராஜநாகம் அடிகளாரின் செயற்பாடுகள், போதனைகளால் மனந்திரும்பிய இம்மக்கள் திருமுழுக்கன்று, தாங்கள் பெரும் மகிழ்ச்சியைப் பெற்றதாகக்கூறி அகமகிழ்ந்தார்கள்.

இப்பத்திரிகை திரு நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1988-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.